பக்கங்கள்: எட்டு

யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2027 கார்த்திகை 17 திங்கட்கிழமை (02-12-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 6

# வடக்குத் தேர்தல்களை ஒத்திவைக்க ஐந்து தமிழ்க் கட்சிகள் வலியுறுத்து!

## அரசின் அறிவிப்புக் குறித்து அவை வியப்பும் தெரிவிப்பு

கொழும்பு, டிசம்பர் 2

மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படாமல், அவர்கள் யாருக்கும் அஞ்சாமல் தேர்தல்களில் பங்குபற்றக் கூடிய சூழ்நிலை ஏற்படும் வரை, வடக்கில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்குமாறு கோருகின்றோம்.

- இவ்வாறு ரெலோ, ஈ. பி. டி. பி., ஈ. பி. ஆர். எல். எவ்., ஈரோஸ், புளொட் ஆகிய ஐந்து தமிழ்க் கட்சிகள் கூட்டறிக்கை ஒன்றின் மூலம் அரசை வலியுறுத்திக் கேட்டிருக்கின்றன.

வடக்கு உள்ளூராட்சித் தேர்தல் அறிவிப்புத் தொடர்பாக இந்த ஐந்து கட்சிகள் விடுத்துள்ள கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வடமாகாணத்தில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவதற்கு தேர்தல் திணைக்களம் நியமனப் பத்திரங்களை டிசம்பர் 11 க்கும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் விடயத்தில் அரசு விடாப்பிடி!

வடக்கில் உள்ளூராட்சி தேர்தலை ஒத்திப்போடும் படி தமிழ்க் கட்சிகள் ஏகோபித்துக் குரல் எழுப்பியுள்ள போதிலும், அரசாங்கம் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதில் உறுதியாக இருக்கிறது என்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தலைவர் ஒருவரை மேற்கோள் காட்டி ''சண்டே ரைம்ஸ்'' தகவல் வெளியிட்டுள்ளது.

புலிகளிடம் இருந்து மீட்ட பகுதிகளில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்த அரசு உறுதியாக இருப்பதாக அப் பத்திரிகை மேலும் குறிப்பிட்டது.

## மீசாலையில் நேற்று கைக்குண்டு வீச்சு!

தென்மராட்சி கண்டி வீதியில் — மீசாலை ஐயா கடையடிப் பகுதியில் — நேற்றுக் காலை 9.00 மணியளவில் படையினர் சென்ற வாகனம் மீது கைக்குண்டு வீசப்பட்டதாகத் தெரியவருகின்றது.

இச்சம்பவத்தில் ஏழு படையினர் வரை காயமுற்றதாகத் தெரிவிக்கப்பட்ட போதிலும் அதனை ஊர்ஜிதப் படுத்தமுடியவில்லை.

காயமடைந்த படையினர் சாவகச்சேரியிலிருது ஹெலிக்கொப்டர் மூலம் பலாலிக்குக் கொண்டு செல்லப்பட்டதாகத் தெரியவந்தது.

(உ-31)

## அரசுக்குள்ளும் வெளியிலும் தேர்தல் நடத்த கடும் எதிர்ப்பு

கொழும்பு, டிச. 2

வடக்கில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதில் அரசு விடாப்பிடியாக இருப்பதாக கருத்துக்கள் வெளியான போதிலும் —

இத்தேர்தலை நடத்துவதற்கு அரசுக்கு உள்ளேயும் வெளியேயும் கடும் எதிர்ப்பு உருவாகி வருவதாக செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டன.

தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்கனவே இத்தேர்தல்களைப் புறக்கணிக்கப் போவதாக அறிவித்து விட்டது. ஏனைய ஐந்து தமிழ்க் கட்சிகளும் இத்தேர்தல் அறிவிப்பை கண்டனம் செய்துள்ளன. அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியும் இந்த நிலைப்பாட்டையே எடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சகல தமிழ்க் கட்சிகளும் ஏகோபித்து இத்தேர்தலை எதிர்ப்பதால் தேர்தலை கைவிட வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு அரசு உள்ளாகியிருப்பதாக 'த சண்டே ஐலண்ட்' கருத்து வெளியிட்டுள்ளது.

பிரதான எதிர்க்கட்சியான ஐ. தே. கவும் இத்தேர்தலை பகிஷ்கரிக்கும் என்று 'த சண்டே ரைம்ஸ்' ஊகம் வெளியிட்டது. அதனை ஊர்ஜிதப்படுத்துவது போல் ஐ. தே. கவின் செயலாளர் காமினி அத்துக்கோறளை நேற்றுக் கருத்து வெளியிட்டார்.

இதே சமயம் —

பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசில் இடம்பெறும் எம். பியும் லங்கா சமசமாஜக் கட்சிப் பிரமுகருமான வாசு

(8 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்த வேலைதான் உது கண்டியளோ......!

## மட்டக்களப்பில் சூடு! கான்ஸ்டபிள் பலி!!

கொழும்பு, டிச. 2

மட்டக்களப்பில் பாதுகாப்பு ஒருங்கிணைப்பு நிலை ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்த போது பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கொல்லப்பட்டார் என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற இச் சம்பவத்தின் போது மேலும் ஒரு பொலீஸ் கான்ஸ்டபிள் கடும் காயங்களுக்குள்ளாகி பொலநறுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டார்.

துப்பாக்கிப் பிரயோகம் செய்த புலிகள் பின்னர் தப்பி ஓடுவதற்கு உதவியதாகக் கூறப்படும் தமிழ் நபர் ஒருவரை பொலீஸார் அவரது சைக்கிளுடன் பிடித்தனர் என்று இலங்கை வானொலி தெரிவித்தது.

## அதிகாரப் பகிர்வை ஏற்றால்தான் ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிப்பு!

### அரசு திட்டவட்டமான அறிவிப்பு

கொழும்பு, டிச. 2

இனப்பிரச்சினை தீர்வுக்காக அரசாங்கம் முன்வைத்துள்ள அதிகாரப்பரவலாக்கல் திட்டத்துக்கு எல்லாக் கட்சிகளும் ஆதரவு வழங்கிய பின்பே, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஒழிக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

அதிகாரப் பரவலாக்கல் திட்டம் நிறைவேறும் வரை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஒழிக்கப்படமாட்டாது என்றும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்குவதற்கு வலியுறுத்தி தொடர் போராட்டங்களை நடத்தப் போவதாக அரசில் இடம் பெற்றுள்ள ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (லலித் பிரிவு) எச்சரிக்கை விடுத்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டணி எம்.பியின் கூட்டம் மீது தாக்கு!

மட்டக்களப்பு, டிச. 2

மட்டக்களப்பு கிரான் பகுதியில் இந்துக் கோயில் ஒன்றில் நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பியான துரைராஜசிங்கம் உரையாற்றிக் கொண்டிருந்தபோது புலிகள் மோட்டார் குண்டு மற்றும் றொக்கற் தாக்குதல்களை நடத்தியதாக ஏ. எவ். பி. செய்தி தெரிவித்தது.

கூட்டத்துக்குப் பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்த இரு இராணுவத்தினரும் நான்கு பொதுமக்களும் இச்சம்பவத்தில் காயமுற்றனர் என இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

சுமார் அரை மணி நேரம் நடத்தப்பட்ட இத்தாக்குதலில் இராணுவத்தினரும் பதில் தாக்குதல் நடத்தியதாகத் தெரிகின்றது என வெரித்தாஸ் வானொலி குறிப்பிட்டது.

விடுதலைப் புலிகளுச்கு ஏற்பட்ட சேத விவரம் பற்றித் தெரியவரவில்லை என்று இராணுவ அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

(கிரான் கிராமம் பற்றிய மற்றொரு செய்தி 4 ஆம் பக்கத்தில்)

## தமிழரைத் திருப்பி அனுப்பும் முடிவை டென்மார்க் அரசு மறுபரிசீலனை

டென்மார்க்கில் அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களைத் திருப்பி அனுப்பும் நடவடிக்கையை டென்மார்க் அரசு மீள் பரிசீலனை செய்து வருகின்றது என புதுடில்லியில் உள்ள டென்மார்க் தூதுவர் பியானி ஹான்ஸன் தெரிவித்துள்ளார்.

டென்மார்க்கில் உள்ள இலங்கைத் தமிழர்களை திருப்பி அனுப்புவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை நிறுத்துமாறு புதுடில்லியில் உள்ள டென்மார்க் தூதுவருக்கு யாழ்ப்பாண மாவட்ட எம். பியும், ஈ.பி.டி.பியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளருமான அ. இராசமாணிக்கம் கடிதம் மூலம் கேட்டிருந்தார்.

அவரது கடிதத்துக்கு டென்மார்க் தூதுவர் அனுப்பிய கடிதத்திலேயே மேற்படி விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதியோப்பிய விமான விபத்து

# கொல்லப்பட்ட 9 தமிழரில் 7பேரின் விவரம் வெளியானது

கொழும்பு, டிச. 2
கடத்தப்பட்ட பின்னர் இந்து சமுத்திரப் பகுதியில் கொமறோஸ் தீவுக்கருகே எதியோப்பிய ஏயர் லைன்ஸின் ''போயிங் – 747'' ரக விமானம் நொறுங்கி விழுந்த சம்பவத்தில் கொல்லப்பட்ட 9 இலங்கைத் தமிழரில் 7 பேரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகப் பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

அடையாளம் காணப்பட்ட அந்த ஏழு பேரின் விவரங்களை வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ளது. அவர்களின் விவரம் வருமாறு:-

★ புவியழகன் சீனிவாசகம் (22 வயது — கைதடி, நாவற்குழி).

★ அவரின் சகோதரி அன்பரசி சீனிவாசகம் (23 வயது — கைதடி, நாவற்குழி).

★ துஷ்யந்தன் கனகரத்தினம் (22 வயது — உவர்மலை, திருகோணமலை).

★ சுகந்தினி பரமலிங்கம் (16 வயது — புங்குடுதீவு), இவர் கொழும்பு பம்பலப்பிட்டி இராமநாதன் மகளிர் வித்தியாலயத்தில் கல்வி பயின்று வந்தவர். இவரது தந்தை வவுனியாவில் வர்த்தகம் செய்துவருகிறார்.

★ ஜெகமோகன் சந்திரபோஸ் (30 வயது — கொழும்பு சிவன் கோவில் மின் நுட்பவியலாளர்).

★ அனுஷா தங்கவேலு (17 வயது — அச்செழு, நீர்வேலி). இவர் சுவிஸில் திருமணம் செய்வதற்காக சென்றவர்.

★ ராஜினி நல்லைநாதன் (23 வயது — கோண்டாவில் கிழக்கு). இவரும் சுவிஸில் திருமணம் செய்வதற்காக சென்றவர்.

இந்த விமானத்தில் பயணம் செய்த மற்றைய இரு தமிழர்களினதும் பெயர்கள் செல்வி. தி. கந்தையா, எஸ். பாலகிருஷ்ணன் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் அவர்களின் சடலங்கள் இன்னும் அடையாளம் காணப்படவில்லை. அவர்கள் பற்றிய மேலதிக விவரங்களும் இன்னும் தெரியவரவில்லை.

(முன்னர் வந்த செய்தி 3 ஆம் பக்கத்தில்)

(உ-3-150)

## கொழும்பில் நடமாடும் 4 பெண் கரும்புலிகள்!

கொழும்பில் உள்ள பொருளாதார நிலைகள் மற்றும் இராணுவ நிலைகள் குறித்து தகவல் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டு நான்கு பெண் கரும்புலிகள் இன்னும் கொழும்பில் நடமாடிவருகிறார்கள் என்று விசேட இரகசியப் பொலீஸ் பகுதியினர் தெரிவித்தனர்.

இவர்களை தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-3-150)

IIS
INSTITUTE OF INFORMATICS STUDIES
JAFFNA - SRILANKA

NEW BATCHES: 7&9-12-96 9 a.m.


● COMPUTER COURSES:
★ BASIC ★ PASCAL ★ C/C++
★ d BASE III ★ LOTUS 123

● ENGINEERING DRAWING
(Specially for Engineering Students)
● SHORT HAND & TYPE WRITING

COURSES CONDUCTED AT:
★ 68, CLOCK TOWER ROAD, JAFFNA.
★ NAVALAR MADAM, KARAVEDDY.

(43885) - DIRECTOR

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர் பொன்னம்பலம் பாலசிங்கம்
(முன்னாள் உரிமையாளர், விமலா ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்)

தோற்றம்: 23—01—1923
மறைவு: 03—11—1996

03 - 11 - 1996 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டி நிகழ்வும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் அவரது இல்லத்தில் நாளை (03 - 12 - 1996) நடைபெறும்.

இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்

விநாயகர் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.
(43888)

## வங்கி ஊழியர் இருவர் கைது!

வங்கியில் தரம் குறைந்த நகைகளை அடகு வைத்துப் பணம் பெறப்பட்டதாகக் கூறப்படும் மோசடியில் சம்பந்தப்பட்டவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் — நீர்கொழும்புப் பிரதேச அரச வங்கிகளைச் சேர்ந்த — இரு ஊழியர்கள் இரகசியப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

நீர்கொழும்பு மக்கள் வங்கியிலும், கடற்றொழில் வங்கியிலும் இந்த நகைகளை அடகு வைத்ததன் மூலம் 17 இலட்சம் ரூபா பெறப்பட்டுள்ளது. ஏற்கனவே 13பேர் இது தொடர்பாக கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குழுவின் தலைவரான கரு என்பவர் புலிகள் இயக்கத்திற்கு நிதி சேகரிப்பவர் என்றும் பொலீஸார் தெரிவித்தனர். (உ-ரி)

## ப.நோ.கூ.ச கிளைக்குழுத் தேர்தல்

30 - 11 - 1996 ஆம் திகதி உதயன் 2 ஆம் பக்கத்தில் வெளியான சுன்னாகம் ப. நோ. கூ. சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தல் அறிவித்தலில் —

14-12-96 இல் நியமனப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் அட்டவணையில் —

23 ஏ ஏழாலை கிளையின் ஏற்றுக்கொள்ளும் கிளை — '23 ஏ ஏழாலை' என்றிருக்க வேண்டும்.

'23 ஏழாலை' என்று வெளியானது தவறாகும்.

இலக்கு நோக்கிய தாக்குதல்:

## விமானப் படைக்கு விசேட பயிற்சி!

கொழும்பு, டிச. 2
தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் குறித்து விமானப்படையினருக்கு ஆசிய நாடு ஒன்றின் விமானப்படை நிபுணர்கள் குழு விசேட பயிற்சி அளித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

கடந்த வாரம் கற்பிட்டியில் விமானப்படையினரின் விமானக் கண்காட்சி (Air Show) இடம்பெற்றதாகவும் —

முப்படைகளின் தளபதிகளும் இக்கண்காட்சியில் பங்குபற்றினர் என்றும் — முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தன.

ஆனால் தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள், இலக்குகள் நோக்கிய தாக்குதல்கள் போன்ற பயிற்சிகளை ஆசிய நாடு ஒன்றின் விமானப்படை நிபுணர்கள் குழு இங்கு வந்து பயிற்சி அளித்ததை அந்த நிகழ்வு என தற்போது தெரிய வந்துள்ளதாக ''சண்டே ரைம்ஸ்'' செய்தி வெளியிட்டுள்ளது. (உ-3-10)

## வாழைச்சேனைப் பகுதியில் படையினர் மீது தாக்குதல்

கொழும்பு, டிச. 2
வாழைச்சேனை, நாவலடிப் பகுதியில் இராணுவத்தினர்மீது புலிகள் சனிக்கிழமை காலை தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

இந்த தாக்குதலின் போது படையினர் மூவருக்கு காயங்கள் ஏற்பட்டதாகவும் —

புலிகளிலும் 10பேர் காயத்துக்கு உள்ளானதாகவும் — இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

புலிகளின் தாக்குதலை தாம் வெற்றிகரமாக முறியடித்து விட்டதாகவும் படையினர் தெரிவித்தனர். (இ-ரி)

## உடுவிலில் நாவலர் விழா

யாழ்ப்பாணம், டிச. 2
உடுவில் இந்து இளைஞர் மன்றம் இன்றைய தினம், இராமநாதன் கல்லூரியில் நாவலர் விழாவை நடத்துகிறது.

இன்று பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும் இவ்விழாவில் கவிதை, இசை, கருத்தரங்கு, இசையரங்கு ஆகியன இடம்பெறும்.

விழாவின் பிரதம விருந்தினராக உடுவில் பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு. இரத்தினராசா, இராமநாதன் கல்லூரி அதிபர் ஆனந்தி சிவஞானசுந்தரம் ஆகியோர் பங்குபற்றுவர். (அ-ரி)

## கோழிக் குஞ்சு மருந்து விநியோகம்

அராலி, டிச. 2
வலிகாமம் மேற்குப் பிரதேச செயலகத்தில் ஒக்ரோபர் பத்தாம் திகதி விநியோகிக்கப்பட்ட கோழிக் குஞ்சுகளுக்கு 35 ஆம் நாள் வழங்கப்பட வேண்டிய ''கம்போறா'' நோய்த் தடுப்பு மருந்து இன்று விநியோகிக்கப்படும்.

கிராமசேவகர் இலக்கம் 157 தொடக்கம் 171 வரையான பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு வட்டுக்கோட்டை கால்நடை வளர்ப்பு சுகாதார நிலையத்திலும் —

கிராம சேவகர் இலக்கம் 172 முதல் 181 வரையான பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு சண்டிலிப்பாய் கால்நடை வளர்ப்பு சுகாதார நிலையத்திலும் —

காலை 9 மணி முதல் பி.ப. 1 மணி வரை பிரஸ்தாப நோய்த் தடுப்பு மருந்து வழங்கப்படும். (அ-12)

# மரண அறிவித்தல்கள்

## D. J. மரியநாயகம்
(சில்லாலை)

சில்லாலையைச் சேர்ந்த D. J. மரியநாயகம் 01 - 12 - 96 நேற்றுக் காலமானார். இவர் எலன் ஜோன் மரியநாயகத்தின் (இராசம்மா) அன்புக் கணவரும், காலஞ்சென்ற D. ஜோன் மரியசவேரியான், மரியஜோன் டியோனாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற P. நீக்கிலாப்பிள்ளை, லோறன்ஸியா (தங்கம்), இமெல்டா (இராணி), றெட்சிற் (லில்லி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று 02 - 12 - 96 திங்கட்கிழமை பி. ப. 3 மணிக்கு சில்லாலை புனித கதிரை மாதா சேமக்காலையில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இராசம்மா
(மனைவி)

சில்லாலை தெற்கு,
சில்லாலை.
(43886)

## கந்தர் கனகசபை
(முன்னாள் கிராமசபை அங்கத்தவர், கச்சாய்)

அல்லாரை தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தர் கனகசபை அவர்களின் இறுதிக் கிரியைகள் 02-12-1996 திங்கள் இன்று பிற்பகல் 1-00 மணிக்கு உப்புக்கேணி வீதி, பெரியமாவடி, சாவகச்சேரியில் அமைந்துள்ள தற்காலிக வதிவிடத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. சுந்தரலிங்கம்
க. முத்துலிங்கம்
(மைந்தர்கள்)

உப்புக்கேணி வீதி,
பெரியமாவடி,
சாவகச்சேரி.
(43887)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரபாவின் பிறந்த தினத்தன்று புரியாணி கேட்ட கைதிகள்!

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டு தமிழ்நாடு பூந்தமல்லி சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கைதிகள் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனின் பிறந்த நாளன்று புரியாணி கேட்டனர்.

ஆனால் சிறைச்சாலை அதிகாரிகள் அதனை அடியோடு நிராகரித்து விட்டனர்.

இதே போன்று தமிழ் நாட்டில் முகாம்களில் வைக்கப்பட்டுள்ள ஈழத்தமிழர்கள் சிலரும் தமக்கு அன்று விசேட சாப்பாடு தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டனர் என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ)

### எதியோப்பிய விமான விபத்தில்

## கொல்லப்பட்ட ஒன்பது தமிழர்களும் அடையாளம் காணப்படவில்லை

கொழும்பு, டிச. 2

கடத்தப்பட்ட பின்னர் இந்து சமுத்திரத்தில் சொமறோதீவுக்கு அருகில் எதியோப்பிய ஏயர் லைன்ஸின் ''போயிங் — 747'' விமானம் வீழ்ந்து நொருங்கியதில் கொல்லப்பட்ட ஒன்பது இலங்கைத் தமிழர்களும் இன்னமும் அடையாளம் காணப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

விமானத்தில் பயணம் செய்தவர்களின் பட்டியலில் இருந்து தப்பியவர்கள் போக ஏனைய பயணிகள் யாவரும் இறந்து விட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இதன்படி இலங்கைத்தமிழர்கள் ஒன்பது பேரின் பெயர்கள் அறிவிக்கபட்டிருந்தன.

இதுவரை எவரும் அச்சடலங்களை அடையாளம் காட்டவும் இல்லை; உரிமை கோரவும் இல்லை என

(5 ஆம் பக்கம் பார்க்க)

# சைவமும் செந்தமிழும் காத்த ஞான சூரியன்!

## நாவலர் குரு பூசை இன்று

சைவத் தமிழ் கலாசார மறுமலர்ச்சியின் தந்தை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தோன்றி நம்மக்களின் நலனுக்காக ஆற்றிய பணிகள் அனேகம். சென்ற நூற்றாண்டில் நமது நாடு ஆங்கிலேயர் ஆட்சியின் கீழிருந்தபோது அந்நியர் வழங்கிய கல்வி வாய்ப்புகளையும், பதவிகளையும், சலுகைகளையும் பெற்ற நம்மவர்களில் பலர் நமது கலாசாரப் பண்பாடுகளை இழந்து கிறீஸ்தவர்களாக மதம் மாறினர் அந்நேரத்தில் ஞானசூரியனாக அவதரித்தவர்தான் நல்லைநகர் பெற்றெடுத்த தவப்புதல்வர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்.

### சைவத்தமிழ் சிங்கம்

இவர் நல்லூரில் கந்தப்பருக்கும் சிவகாமியம்மைக்கும் ஆறாவது குழந்தையாக 1822இல் பிறந்து ஆறுமுகம் என்ற பெயருடன் விளங்கினார். இளமையில் தமிழிலக்கண இலக்கியங்களை முறைப்படி கற்றுக்கொண்ட இவர் ஆங்கிலக் கல்வியை யாழ். மத்திய கல்லூரியில் பெற்றுக்கொண்டார். அப்போது அக்கல்லூரியின் அதிபராக இருந்த பீற்றர் பேர்சிவல் துரை அவர்கள் இவரது தமிழ் ஆங்கிலப் புலமையைக் கண்டு வியந்து கிறீஸ்தவ விவிலிய வேதத்தை இவர் மூலம் தமிழில் மொழி பெயர்ப்பித்தார். இவர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கற்ற, கற்பித்த காலங்களில் கிறீஸ்தவ மதத்திற்கு மதம் மாறு மாறு மேற்கொள்ளப்பட்ட தூண்டுதல்களுக்கு அடிபணியாது சைவத்தமிழ் கம்பீர சிங்கமெனத் திகழ்ந்தார்.

### சீவகருணையின் சின்னம்

அந்நேரத்தில் சைவத்தமிழ் மக்களுக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணிக்கும் நோக்கில் திருமண வாழ்வை —சுக போகவாழ்க்கை—வாழ்வதைத் துறந்தார். மக்களிடையே சைவத்தமிழ் அறிவையூட்டப் பிரசங்கங்களை நடாத்தியும், நூல்களை வெளியிட்டும் வந்தார்; ஆலய அறங்காவலர்கள், பிராமணர்கள் ஆகியோர் நல்லொழுக்க சீலர்களாகத் திகழவேண்டும் என்பதற்காக அவர்களுக்கேற்ற அறிவுரைகளை வழங்கி வந்தார்.

கிறீஸ்தவ மிஷனரிமார் மேற்கொண்ட சைவ தூஷணத்திற்கு பரிகாரம் காணும் நோக்கில் சைவ தூஷணபரிகாரம் எனும் நூலை வெளியிட்டார்.

நம் மக்களிடையே காணப்படும் ஏழ்மையைப் பயன்படுத்தி நடத்தப்படும் மதமாற்றத்தை தடுக்கப் பலவகையிலும் முயன்றார். பஞ்சகாலமொன்றில் அவர் மேற்கொண்ட கஞ்சித் தொட்டி இயக்கம் இவற்றுள் முக்கியமானது.

அவரது சேவை சீவகருணையின் அடிப்படையிலானது என்பதற்கு இது நல்லுதாரணமாகும்.

### முதற்பிரசங்கம்

அவர் தனது முதற் பிரசங்கத்தை 1847 ஆம் ஆண்டு வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் தொடங்கினார். வெள்ளிக்கிழமை தோறும் அவரது பிரசங்கத்திற்கு மக்கள் கூட்டம் திரண்டது. அன்று தொட்டு அவர் புகழ் உலகமெலாம் பரவத் தொடங்கிற்று.

### நாவலர் பாரம்பரியம்

சைவத்தமிழ் ஆர்வங்கொண்ட மாணவர்களை அரவணைத்து அவர்களுக்கு உணவு, உடை, உறையுள் கொடுத்து; அவர்களுக்கு சைவத்தமிழ் அறிவைப் புகட்டியதோடு ஆலயங்களில் புராணபடனம் மேற்கொள்ளப் பயிற்சியும் அளித்தார். இதன் மூலம் நாவலர் பாரம்பரிய மாணவ பரம்பரை இன்றும் நின்று நிலவ வழி செய்தார்.



### பிரசங்க சிங்கம்

1849 ஆம் ஆண்டு தென்நாட்டிற்கு சென்ற அவரின் வாக்கு வன்மையை அங்கு அவர் நிகழ்த்திய பிரசங்க மூலம் அறிந்த திருவாவடுதுறைஆதீனம் அவருக்கு ''நாவலர்'' எனும் விசேட பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது; அவரது புகழ் தென்னாடு முழுவதும் பரவியது. நாவலர் பெருமையைப் பேசுபவர் பெரியவர்; நாவலரை மதிப்பவர் பெரியவர் என்ற நிலை உருவானது.

ஏழாலையூர்ப் பண்டிதர் சைவசித்தாந்தப் பேரறிஞர் திரு. மு. கந்தையா அவர்கள், நாவலர் பிள்ளைத் தமிழில் பிரசங்கம் செய்யும் பெருமை பற்றிக் கூறுகையில் ''வித்துவ சபாப்பிரசங்க சிங்கமாப் பேசு புகழ் நாவலர்'' என்கிறார்.

### நாவலர் புகழ்

நாவலருக்கு மதுரையில் குதூகல வரவேற்பளிக்கப்பட்டது. நாவலர் அமுதமழையாகச் சொன்மாரி பொழிந்தார். மக்கள்கூட்டம் நாவலர் பிரசங்கத்தைக் கேட்கக் கடலெனத் திரண்டது. மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நாவலர் நடாத்திய பிரசங்கத்தின் போது அவரது திறமையை வியந்து மகாசந்நிதானம் தனது காதிலணிந்திருந்த குண்டலங்களைக் கழற்றி நாவலர் காதில் அணிவித்தார். சின்னச் சந்நிதானம் தனது கழுத்தில் அணிந்திருந்த உருத்திராட்ச மாலையைக் கழற்றி நாவலர் கழுத்திலிட்டு மகிழ்ந்தார். இப்படிப் பட்டது நாவலர் புகழ்.

### நூல் வெளியீடு

இத்தகைய பெருமை பெற்ற நாவலர் கந்தபுராணம், பெரியபுராணம் போன்ற நூல்களைப் பதிப்பித்ததுடன் அவற்றை வசன நடையிலும் எழுதி வெளியிட்டார். சைவமக்கள் சைவ நெறியை விளங்கிக் கொள்ளும் விதத்தில் சைவ வினாவிடை போன்ற நூல்களை அச்சுவாகனம் ஏற்றினார்.

ஏட்டிற் கிடந்து அழியும் நிலையிலிருந்த பல நூல்களை அரிதின் முயன்று ஆராய்ந்து பிழையின்றி வெளியிட்ட பெருமை அவரது தனித்துவதத்திற்கு இன்றும் சான்றாகிறது.

### தமிழர் தலைவரைத் தேர்ந்தெடுத்தவர் நாவலரே

மிஷனரிமார் வெளியிட்ட பிரசங்கங்களுக்கு எதிராக அவர் வெளியிட்ட கண்டனங்கள் எம்மவரின் மதமாற்ற வேட்கையால் இந்நாட்டின் பாரம்பரிய கலாசார வாழ்விற்கு ஏற்பட வந்த அச்சுறுத்தலுக்கு ஆப்பு வைத்தன. எந்தவித ஸ்தாபனமோ, அமைப்போ இன்றி அந்நிய ஆட்சியின் ஆதிக்கத்தை மூர்த்தண்யமாக எதிர்த்த பெருமை ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரையே சாரும்.

1879 ஆம் ஆண்டு சைவத் தமிழ் மக்களின் பிரதிநிதியாக அரச நிர்ணய சபைக்கு ''நீறுதாங்கிய தமிழ்ச் செம்மல்'' சேர். பொன். இராமநாத செல்வதற்கு வாக்குப் பெரும்பான்மைப்பலம் பெற்றுக் கொடுத்த பெருமை ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுக நாவலரையும் சாரும்.

நம் நாட்டில் ஏற்பட்ட கலாசார அழிவுகளை முழுமனதோடு ஆத்மீக பலத்துடன் அல்லும் பகலும் எதிர்த்து வெற்றி கண்ட வீரர் ஆறுமுகநாவலர். அவர் 1879 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் மக நட்சத்திரத்தில் இறைவனடி சேர்ந்தார். அவர் மறைவு தினத்தைக் குருபூசை தினமாகப் பேணி வருவது யாழ்ப்பாண மரபு.

**சி. சக்திகிரீவன்**

## நாவலரின் பணிகளை இன்று அறிமுகப்படுத்த வேண்டுகோள்

யாழ்ப்பாணம், டிச. 2

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் பணிகளை இளஞ் சந்ததியினர் நன்கு அறியும் பொருட்டு, பாடசாலைகள், சைவ மன்றங்கள், தமிழ்ப் பேரவைகள் அவரது குருபூசை தினத்தை இன்று அனுஷ்டிக்க வேண்டும்.

சைவ பரிபாலன சபை விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அந்த அறிக்கை வருமாறு:-

சைவத்திற்கும் தமிழுக்கும் அருந்தொண்டாற்றிய யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் 117 ஆவது குருபூசைத்தினம் இன்றாகும்.

அன்றைய காலகட்டத்தில் நாவலர் சைவத்தையும் தமிழையும் தமது இரு கண்களாகக் கருத்திற் கொண்டு ஆற்றிய தியாகப் பணியைச் சைவத் தமிழ் உலகம் என்றுமே மறக்க முடியாது. அன்னாரின் வாழ்க்கை வரலாற்றை, செயற்கரிய பணிகளை எதிர்காலச் சமுதாயம் அறிந்து கொள்ள வாய்ப்பளிக்க வேண்டியது எங்கள் கடமையாகும்.

அவரது சமயப்பணி, தமிழ்ப்பணி, சமூகப்பணி ஆகியவற்றின் அம்சங்களின் உண்மை நிலையினை உணர வேண்டியதும் எமது கடமையாகும்.

ஆகவே ஆறுமுகநாவலரின் நினைவாக, நன்றிக் கடனாக நாம் என்ன செய்ய வேண்டும் என்று சிந்தித்துச் செயற்பட முயற்சி செய்வோமாக!

அவர் இயற்றிய இலக்கணச் சுருக்கம், இலக்கண வினாவிடை, நன்னூற்காண்டிகையுரை என்பன தமிழ்ப் புலமைக்கு உறுதுணைதரும். சைவ சமயத்தின் ஆழ்ந்த கருத்துக்களை முதலாம், இரண்டாம் சைவ வினாவிடைகள் எடுத்துக் காட்டும். எனவே இன்றைய காலகட்டத்தில் நாவலர் பெருமானின் தொண்டு எந்த அளவுக்குப் பயன்படும் என்பதின் உண்மை நிலையை ஆராய்ந்து, முன்வைக்க சைவத் தமிழ் உலகம் முன்வர வேண்டும்.

ஆகவே அவரது குருபூசை நிகழ்ச்சிகளை இன்றைய தினம் பாடசாலைகள், சைவ மன்றங்கள், தமிழ்ப் பேரவைகள் சிறப்பாக நடத்தி இன்று ஒருமணி நேரமாவது அவரின் நற்பணிக்கு நன்றி பாராட்டுவதோடு —

அன்னாரின் நினைவாக நாம் செய்யவேண்டிய பணிகள் குறித்துச் சிந்திப்போமாக! இளஞ் சமுதாயத்தினருக்கு அவரின் உயர்ந்த இலட்சியங்களை உணர வைப்போமாக! — என்று உள்ளது.

## நாவலர் வாழ்க!

செந்தமிழுய்ய சைவத்திருநெறி விளங்க வந்தோன்!
அந்தமில் கல்வி கேள்வி யாழியைக் கடைந்து, நாளும்
தந்தனன் அமுதநூல்கள் சாவிலா வரத்தைப் பெற்றான்
நந்தமிழுள்ள மட்டு நாவலன் வாழ்க மாதோ!

அங்கையி னெல்லி போலே யாகமப் பொருளுணந்தோன்
சங்கரன் அருமைச் செல்வியாகிய தமிழணங்கைத்
தங்கமாம் அரியணைமீ தேற்றியே தமிழரான
நந்குல முய்யச் செய்த நாவலன் வாழ்க மாதோ!

அருந்தமிழ்க் கலைமகள்கை யாழெனும் யாழ்ப்பாணத்தின்
பெருந்தவப் பயனாய்த் தென்னா டிலகிடப் பிறங்குஞ்சைவ
விருந்தளி மணியாய் எங்கள் வீடொளிர் விளக்காய் வந்து
பொருந்திய முருகனன்பார் நாவலன் பொலிகமாதோ!

அச்சத்தைத் துறந்தான், உள்ளத் தரனையே நினைந்தான் மூவர்
சொற்சுவை அணிந்தான்; ஆன்றோர் தொடுத்த நன்னூல்கள் வாழ்.
மெச்சு நற்பணிகள் செய்தான், வியன்றமிழ் வியாசனென்றெம்
உச்சிமேல் வைக்கத்தக்க நாவலன் ஒளிர்க மாதோ!

நற்றமிழ்க்குரிசிலான நாவலன் வாழ்வைப் பாரீர்!
கற்றவன் புரிந்த செஞ்சொற் கனி தமிழ்த் தொண்டைக் காணீர்!
பெற்ற நற் தாயின் வீரப் பெருமையை நிலை நிறுத்த
முற்றிய காதலோடு முத்தமிழ் முழக்கஞ் செய்வீர்!

அருந்தமிழ் வாழ்க! நாளும் அறவினை பெருகச்செய்யும்
பெருந்தகையாளர் வாழ்க! பிறங்குக தவவொழுக்கம்
குருந்(து) அடி வீற்றிருக்கும் குருமணியருளினாலே
திருந்(து) அடியார்கள் வாழ்க, சிவநெறி தழைக்கமாதோ.

**- சுத்தானந்த பாரதியார் -**

(சுத்தானந்த பாரதியார் எழுதிய நாவலர் பெருமான் என்னும் நூலிலிருந்து.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடுகாட்டு நிலைமைக்குதான் யாழ்ப்பாணம் செல்கிறது!

## நாடாளுமன்றில் ஈ.பி.டி.பி. உறுப்பினர் உரை

கொழும்பு, டிச. 2

யாழ்ப்பாணம் அரசபடைகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்தபோது, அதனை ஓர் அமைதிப் பூங்காவாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்திருந்தார். ஆனால் அது இன்று சுடுகாட்டு நிலைக்குச் சென்று கொண்டிருக்கிறது.

கடற்றொழில் நீரியல் வள அமைச்சின் நிதி ஒதுக்கீட்டுப் பிரேரணையில் நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்துகையில் ஈ.பி.டி.பியைச்சேர்ந்த யாழ். மாவட்ட எம். பி. பாஸ்கரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பல வருட வடக்கு—கிழக்கு யுத்தத்தினால் இலங்கையின் மொத்த கடற்பரப்பில் மூன்றில் ஒரு பகுதியான வடக்கு-கிழக்குப் பிரதேசத்தில் எந்தவொரு கடற்றொழில் நடவடிக்கையும் பெரிதாக இடம் பெறுவதில்லை.

கடந்த ஆறு வருடங்களாக கடற்றொழில் செய்ய முடியாத நிலை யாழ். மாவட்டத்தில் நிலவி வருகின்றது.

அகதிகளான கடற்றொழிலாளர் குடும்பங்கள் அடிப்படை வசதிகளற்ற நிலையில் இன்று வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

வேறு தொழில்கள் செய்வதற்கு அவர்களுக்கு தொழிற் பயிற்சி அனுபவமும் இல்லை.

வருவாயற்ற நிலையில் அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிவாரணப் பொருள்களையே முழுமையாக அவர்கள் நம்பி இருக்க வேண்டியுள்ளது. வழங்கப்படும் நிவாரணப் பொருள்களும் போதுமானதாக இல்லை.

யாழ். மாவட்ட அபிவிருத்தி பற்றிய பேச்சு எடுத்துக் கொள்ளப்படும் போதெல்லாம் பாதுகாப்புப் பிரச்சினை முன்வைக்கப்படுகின்றது.

அரசு மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நம்பி —

தமது எதிர்காலக் கனவுகள் நனவாகும் என்ற நப்பாசையில் — யாழ். குடாநாட்டுக்குள் வந்தவர்களின் மனநிலை இன்றைய யாழ். குடாநாட்டு நிலவரங்களால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது

இப்படி அவர் மேலும் கூறினார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் டாக்டர். ஐ. எம். இலியாஸ் உரை நிகழ்த்துகையில் —

'யாழ். குடாநாட்டில் கடற்தொழில் செய்ய ஏதுவாக கடற்புலிகளைக் கட்டுப்படுத்தினால் அங்கு மீன்பிடி நடவடிக்கைகளை ஆரம்பிக்க அமைச்சு நடவடிக்கை எடுக்கும்.

மட்டக்களப்பில் அபிவிருத்தி வேலைகளுக்கு ஆதரவளிப்பதாக புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

இன்று பிரபாகரனின் பிறந்ததினம். வடக்கில் கடற்புலிகளை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் படி அவரைக் கேட்க வேண்டும் —என்றார். (இ-ரி)

## வவுனியாவில் 35 பேர் கைது செய்யப்பட்டனர்

### வடக்கிலிருந்து வந்தவர்கள்

கொழும்பு, டிச. 2

விடுதலைப்புலிகள் எனச் சந்தேகிக்கும் 35 பேர் வவுனியா மாவட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர் என பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை தெரிவித்தார்.

படையினரால் விடுவிக்கப்பட்ட ஏனைய பகுதிகளில் உள்ள மக்களை வவுனியாவுக்குள் அனுமதித்த போது, அவர்களுடன் சேர்ந்து இவர்களும் வவுனியாவுக்குள் ஊடுருவியிருந்தனர் என்றும்—

இவர்கள் பொது மக்களுடன் கலந்து நடமாடி பாதுகாப்பு படையினர் பற்றிய விவரங்களை திரட்டுவதில் ஈடுபட்டிருந்தார்கள் என்றும்— தெரிவிக்கப்பட்டது. (இ-3)


## ஓராண்டு நிறைவில் ஓராயிரம் சோகக்கனல்

அன்னை மடியில்: 10 — 03 — 1976



ஆண்டவன் அடியில்: 02 — 12 — 1995

### செல்வன் பத்மராஜா பத்மபிரபா

(யா / யூனியன் கல்லூரி 1995 ஆம் ஆண்டு வர்த்தகப் பிரிவு மாணவன்)

உன்னையும் மறப்பதுண்டோ — மறந்தால்
உள்ளத்தில் அமைதியுண்டோ!
ஓராண்டல்ல ஓராயிரம் ஆண்டு சென்றாலும்
உன் நினைவு எம் இதயத்தில் அகலாது.

பிரிவால் வாடும்:

**1995 ஆம் ஆண்டு வர்த்தகப் பிரிவு மாணவர்கள்**

யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை.

(43858)



## 4 ஆம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு: 17 — 05 — 1919



இறப்பு: 02 — 12 — 1992

### அமரர் M. P. அருளானந்தம்

(ஓய்வுபெற்ற சிறைச்சாலை ஓவசியர்)

எமது தந்தையை அன்புடன் நினைவு கூருகின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்.

'' அருளானந்த பவனம் ''
Dr. சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

(43883)


## யாழ். ஆஸ்பத்திரி உள்ளகத் தொலைபேசி

யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ளகத் தொலைத்தொடர்பு சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சுமார் 25 தொலைபேசிகளே தற்போது இயங்கக்கூடிய நிலையில் ஆக்கப்பட்டுள்ளன.

போதனாவைத்தியசாலை இடம் பெயர்வதற்கு முன் மொத்தமாக 96 உள்ளகத் தொலைபேசிகள் அமைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-15)

## 2 பேர் விடுவிப்பு; 2 பேர் காவலில்!

திருகோணமலை உள்துறைமுகவீதியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற தற்கொலைத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டிருந்த திருமலை மீன்பிடித்திணைக்கள ஊழியர்கள் நால்வரில் இருவர் விடுவிக்கப்பட்டனர்.

கைதானவர்களில் ஒருமுஸ்லிமும், ஒரு சிங்களவரும் விடுவிக்கப்பட்டனர்; இருதமிழர்கள் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை — திருகோணமலை நகரப்பகுதியில் படையினர் நேற்று முன்தினம் மேற்கொண்ட தேடுதலில் 9 பேர் கைது செய்யப்பட்டனர். (உ-3-150)

## இந்தியா, அமெரிக்கா உட்பட

# இலங்கை விடயத்தில் எந்நாடும் தலையிடாது!

### சித்தார்த்தன் கூறுகின்றார்

''இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் கனடா, அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா போன்ற நாடுகள் தலையிடும் ஏது நிலை இல்லை.

— புளொட் அமைப்பின் தலைவர் திரு. சித்தார்த்தன் 'நவமணி' பத்திரிகைக்கு இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் பயணம் செய்து திரும்பிய பின்னர் அவர் அளித்த பேட்டியிலேயே இதைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இனப்பிரச்சினை விடயத்தில் நேரடியாக தலையிட எந்த நாடும் தயார் இல்லை. இராணுவரீதியாகவேவோ, அரசியல் ரீதியாகவோ தமிழர்களுக்கு உதவ எந்த நாடும் தயார் இல்லை.

விடுதலைப் புலிகளுக்கு எல்லா நாடுகளிலும் ஆதரவாளர்கள் இருப்பதை மறுப்பதற்கில்லை. இந்த ஆதரவு இருப்பதற்கு காரணம், தாம் அந்தந்த நாடுகளில் தொடர்ந்தும் வாழவேண்டும் என்ற நிலையில் அங்குள்ள தமிழர்கள் இருப்பதுதான்.

அதேநேரம், ஜனாதிபதி சந்திரிகாவுக்கு உலக நாடுகளில் ஆதரவு அதிகரித்து வருகிறது — என்றார். (உ-3-150)

## கிரான் பகுதியிலிருந்து மக்கள் இடம்பெயர்வு

கடந்த திங்கட்கிழமை மட்டக்களப்பு மாவட்டம் கிரான் பகுதியில் இடம் பெற்ற மோதல் சம்பவத்தின் பின்னர் அப்பகுதியில் இருந்து மக்கள் பாதுகாப்பான வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்து விட்டனர்.

இதனால் கிரான் பகுதி மயான அமைதியுடன் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை — கிரான் பகுதியில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் துரைராஜசிங்கம் பாதுகாப்பு பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்தையைக் கேட்டுள்ளார். (உ-3-150)

## மருந்து இன்னும் வரவில்லை

யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களத்துக்கு மூன்றாம், நான்காம் கந்தாய மருந்துகள் இன்னமும் வந்து சேரவில்லை.

இதனால் குடாநாட்டில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளில் மருந்து வகைகளுக்கு தொடர்ந்து தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

# வாகனங்கள் உங்களுடையவையா?

யாழ்ப்பாணம், . டிச 2

கடந்த காலத்தில் கைவிடப்பட்டு — இதுவரை இராணுவப் பாதுகாப்பில் இருந்து வந்த —வாகனங்கள் உடனடியாக விடுவிக்கப்பட்டுள்ளன.

அவற்றில் அனேகமான வாகனங்களில் பதிவிலக்கம் காணப்படவில்லை.

ஆதலால் அவ்வாகனங்களின் உரிமையாளர்கள் தகுந்த ஆதாரங்களையோ, உரிய பத்திரங்களையோ சமர்ப்பித்து தங்களுடைய வாகனங்களை மீண்டும் பெற்றுக்கொள்ளலாம் என பலாலி இராணுவத் தலைமையகத்திலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ப. திலகநாயகம் தெரிவித்தார்.

வாகனங்களினதும் அவை இருக்கின்ற இடங்களினதும் விவரம் வருமாறு:-

**யாழ்ப்பாணம் 512 பிரிகேட்டில்**

★ வொக்ஸ்வகன் கார் — இயந்திர இலக்கம் 1–0802582.

★ வொக்ஸ்வகன் கார்.

★ மொறிஸ் மைனர் 1000 — இயந்திர இலக்கம் APIN 46036.

★ CD 50 மோட்டார் சைக்கிள் — இயந்திர இலக்கம் 8168295.

**ஊர்காவற்றுறை 27 பிரிகேட்டில்**

★ பஜாஜ் ஸ்கூட்டர் — இயந்திர இலக்கம் 67844 - அடிச்சட்ட இலக்கம் 06V 383448.

★ ஹொண்டா சாளி — இயந்திர இலக்கம் CF 50E 293888 — அடிச்சட்ட இலக்கம் CF 502639744.

★ ஹொண்டா சாளி — இயந்திர இலக்கம் CF 50E 220307 — அடிச்சட்ட இலக்கம் CF 502200419.

★ ஹொண்டா சாளி — இயந்திர இலக்கம் CF 5 0E 2443936 —அடிச்சட்ட இலக்கம் CF 502443583.

★ ஹொண்டா 90 —இயந்திர இலக்கம் HA2 - 1100167 — அடிச்சட்ட இலக்கம் HA2-1100192.

★ ஹொண்டா CD 125 — இயந்திர இலக்கம்-CG 10211 — அடிச்சட்ட இலக்கம் CG 1101843.

★ ஹொண்டா 90 — இயந்திர இலக்கம் C 90 E 4106732 —அடிச்சட்ட இலக்கம் C 904106679.

★ ஹொண்டா 90 — இயந்திர இலக்கம் HM 02F 10 — அடிச்சட்ட இலக்கம் 10 B69509.

★ வொக்ஸ்வகன் கார்

★ 135 டிராக்டரும் டிறில்லரும்.

**காங்கேசன்துறையில்**

★ ஹம்பர் கார் — வாகன இலக்கம் EN 9276.

**மற்றும் வாகனங்கள்**

★ வொக்ஸ்வகன் கார் — வாகன இலக்கம் 11ஸ்ரீ0008.

★ யமாஹா 100 மோட்டார் சைக்கிள்.

★ ஒஸ்ரின் இங்கிலாந்து கார் — வாகன இலக்கம் EN 6275.

★ ஹொண்டா 180 மோட்டார் சைக்கிள் — அடிச்சட்ட இலக்கம் 2071892.

★ வொக்ஸ்வகன் கார் — இயந்திர இலக்கம் 2314397.

★ ஹொண்டா மோட்டார் சைக்கிள் — இயந்திர இலக்கம் 4234.

★ ஹொண்டா CD 125 சைக்கிள் — இயந்திர இக்கம் 5037670.

★ ஹொண்டா CD 90 சைக்கிள் — இயந்திர இலக்கம் 5132073.

★ ஹொண்டா CD 200 சைக்கிள் — இயந்திர இலக்கம் 2121062. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய-சீன எல்லைப் புறத்தில் ஆயுதக் குறைப்புக்கு இணக்கம்

## புதுடில்லியில் இரு தரப்பும் உடன்பாடு

புதுடில்லி, டிச. 2

இந்திய - சீன எல்லையில் ஆயுதங்களையும், இராணுவ தளபாடங்களையும் குறைத்துக்கொள்ள இரு நாடுகளும் இணக்கம் கண்டுள்ளன.

இந்தியாவுக்கு வருகை தந்திருந்த சீன அதிபர் மற்றும் சீனத் தலைவர்களுடன் இந்தியத் தலைவர்கள் நடத்திய பேச்சுக்களின்போது இது தொடர்பாக இணக்கம் காணப்பட்டு உடன்பாடு கைச்சாத்தானது.

பாகிஸ்தானுக்கு அணு ஆயுதத் தொழில் நுட்பங்களை வழங்கப்போவதில்லை என்று சீனா இந்தியாவிடம் உறுதி தெரிவித்துள்ளது.

இந்திய - சீன நாடுகள் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் வட்டார அமைதிக்கு பெரும் பங்காற்றும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கூறியது.

தமது இந்திய விஜயத்தின் போது சீன அதிபர் தாஜ் மகாலையும் பார்வையிட்டார்.

நேற்றுப் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட பின் சீன அதிபர் இன்று பாகிஸ்தானுக்கு செல்கிறார்.

சீன அதிபரின் விஜயத்தை ஒட்டி புதுடில்லியில் உள்ள சீனத்தூதரகத்துக்குமுன்பாக ஆர்ப்பாட்டம் செய்த சுமார் ஐம்பது திபெத்தியர்களை பொலீஸார் கைது செய்தனர்.

தூதரகத்தின் மீது அவர்கள் கல் வீசியதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

### தமிழ் நாட்டில்

## கடத்தலை தடுக்கும் நடவடிக்கை தீவிரம்!

சென்னை, டிச. 2

தமிழகத்தில் இருந்து இலங்கைக்குச் சட்டவிரோதமாகப் பொருள்கள் கடத்தப்படுவதைத் தடுக்கும் நடவடிக்கையில் தமிழக மாநிலப் பொலீஸார் தீவிரமாக ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

மதுரை, திருச்சிராப்பள்ளி பகுதிகளில் பொலிஸார் மேற்கொண்ட தேடுதலில் இக்கடத்தலில் தொடர்புடைய 17 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஈழத்தமிழர்கள் சிலர் அடங்குவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கடத்தலைத் தடுக்கும் வகையில் கரையோரப் பாதுகாப்புப் படையினர் தீவிர ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3-150)

## ஊழலுக்கு எதிராக பெரும் போராட்டம்!

### பாரதீய ஜனதா மும்முரம்

புதுடில்லி, டிச. 2

ஊழலுக்கு எதிராக நாடு தழுவிய போராட்டத்தை நடத்த இந்தியாவின் பிரதான எதிர்க்கட்சியான பாரதீய ஜனதாக்கட்சி முடிவு செய்துள்ளது.

இம்மாதத்தின் 2 ஆவது வாரத்தில் பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர்களும், தொண்டர்களும் சிறை நிரப்புப் போராட்டத்தில் ஈடுபடுவர் என்று இக்கட்சியின் தலைவர் எல்.கே. அத்வானி தெரிவித்தார்.

''நமது நாட்டில் இது வரைகாலமும் ஆட்சியில் இருந்த அரசுகளில் 91 முதல் 96 வரை ஆட்சியில் இருந்த நரசிம்மராவின் அரசுதான் மிகவும் ஊழல் நிறைந்த அரசு. இதனை நிரூபிக்க சமீபத்திய நீதிமன்ற நடவடிக்கைகளே போதுமானவை. வேறு ஆதாரங்கள் தேவையில்லை — என்று அத்வானி குறிப்பிட்டார்.

இதேவேளை கடந்த வாரம் ஒரிஸா மாநிலத்துக்கு முன்னாள் பிரதமர் நரசிம்மராவ் சென்ற போது, பாரதீய ஜனதாக் கட்சி இளைஞர் அணியினர் அவருக்கு கறுப்புக்கொடி காட்டி கண்டனம் செய்தனர். (உ-3)

## அழைப்பாணை

சென்னை, டிச. 2

டான்ஸி பேர வழக்குத் தொடர்பாக டிசம்பர் மாதம் 21 ஆம் திகதி முதன்மை அமர்வு நீதிமன்றத்துக்கு நேரில் வரவேண்டும் எனக் கோரும் அழைப்பாணையை தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவிடம் மாநில குற்றப் புலனாய்வுப் பிரிவு வழங்கியது.

இந்தஅழைப்பாணை ஜெயலலிதாவிடம் நேரில் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### 55 ஆண்டுகளுக்கு முன்னர்

## 31 லட்சம் கலன் எண்ணெயுடன் மூழ்கிய கப்பல் கண்டுபிடிப்பு!

கலிபோர்னியா. டிச2

1941 ஆம் ஆண்டில் டிசம்பரில் ஜப்பானிய நீர் மூழ்கிக் கப்பல் நடத்திய தாக்குதலில் 31 லட்சம் கலன் மசகு எண்ணெயுடன் கடலில் மூழ்கிய அமெரிக்க எண்ணெய்த் தாங்கிக் கப்பலொன்று தற்போது கலிபோர்னிய கடற்கரைப் பிராந்தியத்தில் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது.

இந்தக் கப்பலில் உள்ள தாங்கியில் நிறைய எண்ணெய் இருக்கிறது என்றும் —

இந்த எண்ணெய் கப்பலிலிருந்து வெளியே வந்தால் கடல் நீர் மாசடையும் அச்சுறுத்தல் உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மத்திய கலிபோர்னிய கரையோரத்திலிருந்து சுமார் 10 கிலோ மீற்றர் தூரத்தில் சுமார் 270 மீற்றர் ஆழத்தில் இக்கப்பல் மூழ்கியிருப்பது ஆராய்ச்சியாளர்களால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. (உ-ரி-10)

## அமெரிக்காவுக்கு எதிராக ஐ. நா. சபையின் தீர்மானம்

### லிபிய பிரேரணை நிறைவேறியது

நியூயோர்க், டிச. 2

அமெரிக்காவுக்கு எதிராக லிபியாவால் முன்வைக்கப்பட்ட பிரேரணை ஒன்று ஐ. நா. சபையால் ஏற்கப்பட்டுள்ளது.

வேற்று நாடுகளின் நிறுவனங்களுக்கும், பிரஜைகளுக்கும் ஒரு தலைப்பட்சமாகத் தண்டனை வழங்குவதற்காக தயாரிக்கப்பட்டுள்ள அமெரிக்காவின் நீதித்திட்டங்களை உடனடியாக ரத்து செய்யுமாறு லிபியா இந்த பிரேரணை மூலம் கேட்டுள்ளது.

இந்தப் பிரேரணையை அனுமதிப்பதற்காக நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் 76 அங்கத்துவ நாடுகள் பங்கு பெறாது மௌனம் சாதித்தது மிகவும் வியப்பான சம்பவம் என்று அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

56 நாடுகள் இத்திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தன. நான்கு நாடுகள் மட்டும் பிரேரணைக்கு எதிராக வாக்களித்தன.

எதற்கும் சார்பற்ற நிலையில் மௌனம் சாதித்த நாடுகளில் ரஷ்யாவும், சீனாவும் அடக்குகின்றன. (உ- 3)

## பூலான் மீதான குற்றச்சாட்டு வாபஸ் இல்லை

புதுடில்லி, டிச. 02

இந்திய நாடாளுமன்ற உறுப்பினரும் சம்பல் பள்ளத்தாக்கு கொள்ளைக் கூட்டத் தலைவியுமான பூலான்தேவி மீது சுமத்தப்பட்டுள்ள 54 கொலை மற்றும் கொள்ளை வழக்குகளைத் தள்ளுபடி செய்ய இந்திய உயர் நீதிமன்றம் கடந்த புதன்கிழமை மறுத்துவிட்டது.

இதனால் பூலான் தேவியின் அரசியல் வாழ்க்கை பெரும் கேள்விக்குள்ளாகிவிட்டது.

நீதிமன்றம் அவரைக் கைது செய்ய உத்தரவிடும்வரை அவர் பதவியில் இருக்கலாம் என உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

அண்மையில் பூலான்தேவி உல்லாசப் பயணமாக பிரான்ஸ் சென்றிருந்தார். (இ-10)

# வவுனியா ஆஸ்பத்திரி நிலை மிகவும் மோசம்!

### பி.பி.ஸிக்கு செய்தியாளர் தகவல்

லண்டன், டிச. 2

வவுனியா மருத்துவ மனை உள்ளூர்வாசிகள், இடம் பெயர்ந்த அகதிகள் மற்றும் காயமடைந்த படையினரால் நிரம்பி வழிகிறது. இதனால் மருத்துவமனை ஊழியர்களின் வேலைகள் அதிகரித்துள்ள போதிலும் தேவையான ஆளணி அங்கு அனுப்பப்படவில்லை.

வவுனியா மருத்துவமனை நிலை குறித்து பி. பி. ஸியின் சிங்கள சேவைக்கு செய்தியாளர் ஜினசேன ரத்துகமகே அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வவுனியா மருத்துவமனைக்கு வழமையாக தினசரி 2 ஆயிரத்து ஐந்நூறு நோயாளர்கள் சென்றுவந்தனர். வடபகுதியிலிருந்து பெரும் எண்ணிக்கையில் மக்கள் வவுனியாவுக்கு வந்ததைத் தொடர்ந்து மருத்துவமனையின் நிலைமை மிக மோசமடைந்துள்ளது. தற்போது சுமார் ஆறாயிரம் நோயாளர்கள் நாளாந்தம் அங்கு செல்கின்றனர். அங்கு பணியாற்றப் போதுமான ஊழியர்கள் இல்லை. மேலும் அங்குள்ள ஊழியர்களுக்கு உரியகொடுப்பனவுகளும் கடந்த 4 மாதங்களாக ஒழுங்காக வழங்கப்படவில்லை.

வவுனியா மருத்துவமனையைச் சேர்ந்த சிற்றூழியர்கள் 12 கோரிக்கைகளை முன்வைத்து கடந்த சனியன்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதனால் மருத்துவ மனையின் செயற்பாடுகள் பெருமளவில் பாதிக்கப்பட்டன.

மருத்துவ்மனை ஊழியர்கள் தங்கள் குறைபாடுகள் பற்றி கடிதமூலமும் நேரிலும் வவுனியா பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் யோகநாதனுக்குத் தெரிவித்தும் பலன் ஏதும் கிடைக்கவில்லை. மாறாக ஊழியர்களின் குறைபாடுகள் நிவர்த்திக்கப்படாமல் அவர்களுக்கு தண்டனைகள் வழங்கப்பட்டன. நிலைமை மோசமாகவே, கடந்த வியாழக்கிழமை ஊழியர்கள் தங்கள் உரிமையை வென்றெடுக்க வேலைநிறுத்தத்தில் இறங்கப் போவதாக முன் அறிவித்தல் கொடுத்தனர்.

வவுனியா மருத்துவமனை நிலைமைகுறித்து பிரதி சுகாதார அமைச்சர் பௌத்திரா வன்னியாராய்ச்சியிடம் விசாரித்தபோது, வவுனியா நிலைமைபற்றி தனக்கொன்றும் தெரியாது எனவும் வவுனியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட மருத்துவ மனையின் நிலைவரம் குறித்து அறிந்திருக்கவில்லை எனவும் தெரிவித்தார். — இவ்வாறு பி. பி. ஸி. செய்தியாளர் குறிப்பிட்டார். (உ—10)

## கட்டுரைப் போட்டி

யாழ்ப்பாணம், டிச. 2

நாளை உலகம் முழுவதும் கொண்டாடப்படும் சர்வதேச ஊனமுற்றோர் தினத்தையொட்டி யாழ். பிரதேச செயலகப் பிரிவில் கட்டுரைப் போட்டி ஒன்று நடத்தப்படுகிறது.

''உடல் குறைபாடுகள் வாழ்க்கைக்கு தடை அல்ல'' என்ற தலைப்பில் நடத்தப்படும் இக்கட்டுரைப் போட்டிக்கான ஆக்கங்களை இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன் யாழ். பிரதேச செயலகத்துக்கு அனுப்புமாறு பிரதேச செயலர் க. குணராசா கேட்டுள்ளார். (உ-3)

### இடம்பெயர்ந்து சென்று

## வன்னியில் பரீட்சை எழுதியோர் பெறுபேறும் யாழ். அனுப்பப்பட்டன

யாழ்ப்பாணம், டிச. 2

யாழ். மாவட்டத்தில் இருந்து இடம் பெயர்ந்து வன்னியில் தங்கியிருந்த சமயம் ஜி.சீ.ஈ (சாதாரணதர) விசேட பரீட்சையில் தோற்றியவர்களின் பரீட்சை முடிவுகளும் யாழ்ப்பாணத்துக்குக் கிடைத்துள்ளன.

இடம் பெயர முன்னர் அவர்கள் கல்வி பயின்ற பாடசாலைக்கே இந்த முடிவுகள் வந்துள்ளன. (இ-3-173)

### வடக்கு-கிழக்குக்கு

## இந்தியா, கியூபா டாக்டர்கள் வருவர்

கொழும்பு, டிச. 2

வடக்கு - கிழக்கில் நிலவி வரும் டாக்டர்கள் பற்றாக் குறையை நீக்குமுகமாக இந்தியா மற்றும் கியூபா போன்ற நாடுகளில் இருந்து வைத்திய நிபுணர்களையும், மயக்க மருந்து கொடுக்கும் மருத்துவர்களையும் வடக்கு-கிழக்குக்கு சேவைக்காக அழைப்பதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கான அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது என்றும்—

இந்த வெளிநாட்டு மருத்துவர்களுக்கு இது வரை காலமும் வழக்கப்பட்டு வந்த மாதாந்தம் 160 அமெரிக்க டொலர்களை (8 ஆயிரம் ரூபா) கொடுப்பனவை 400 அமெரிக்க டொலராக (20 ஆயிரம் ரூபாவாக) உயர்த்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் —

சுகாதார அமைச்சர் பௌசி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இந்திய, கியூப நாடுகளின் சுகாதார அமைச்சுக்களுடன் பேச்சுகள் நடத்தப்பட்டுள்ளன என்றும் —

வைத்தியர்களை அனுப்ப அந்நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளன என்றும் —

அமைச்சர் மேலும் தெரிவித்தார். (உ-3-ரி)

## கொல்லப்பட்ட.....

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரியவந்தது.

உண்மையில் பெயர் அறிவிக்கப்பட்ட ஒன்பது தமிழர்களும்தான் இறந்தார்களா? இல்லையா? — என்பது குறித்து வெளிநாட்டலுவல்கள் அமைச்சு ஆராய்ந்து வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள பஜாஜ் ஸ்கூட்டர், ஏசியா சைக்கிள் ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு; K. மோகன், மங்களபதி வைத்தியசாலை, சங்கிலியன் வீதி, (பண்டாரக்குளம் பிள்ளையார் கோயிலடி) நல்லூர். (43875)

வெற்றுச் சாக்கு, உரப்பை விற்பனைக்குண்டு. தங்கள் விலையைக் குறிப்பிட்டு 10-12-96 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். பொது முகாமையாளர், யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கம்-வ.து. 291, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாண்ம். (சி-3637)

### தவறிவிட்டது

தியாகராஜசர்மா கோகிலராணி [ஆவரங்கால், புத்தூர்] ஆகிய எனது 548423058 V இலக்க அடையாள அட்டை சுன்னாகத்திற்கும், ஈவினை சந்திக்குமிடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் அதில் உள்ள விலாசத்திற்கு தயவு செய்து அனுப்பி வைக்கவும் அல்லது யாழ்ப்பாணம் லிங்கம் புடைவை அகத்தில் கையளிக்கவும். (43881)

பலாலி புனித செபஸ்தியார் வீதியை சேர்ந்த மரியரட்ணம் தெலசால் மரியதாஸ் என்பவருடைய விஷேட அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஞானரஞ்சன் மரியதாஸ், அம்பிகை களஞ்சியம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (43884)

### அக்கரைச் சீமையில்

250 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதியது. இங்கிலாந்து சென்ற இலங்கையரது சுவையான கதை. துன்பங்களை மறந்து வாசிக்கலாம். கனவு போலிருக்கும். ரூபா 25. பூபாலசிங்கம் புத்தகசாலை. (43863)

### வீடு தேவை

சிறந்த குடும்பத்திற்கு நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு அரை மைலுக்குள் குள் இரண்டு அறைக்கு மேற்பட்டதும், குறைந்தது இரண்டு வருட குத்தகைக்கு, நியாயமான வாடகைக்கு தேவை. தொடர்பு. சண்முகராஜா (மதிப்பீட்டாளர்), இல. 387, கோயில்வீதி, நல்லூர். (43868)

### வியாழ மாற்றம்

எங்கும் விற்பனை. உங்கள் பலாபலன் அறிய முந்துங்கள். வெள்ளி விழா ஜோதிடர் வேலணை V. A சிவராஜா, 152B, அரசடி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (43880)

### TUTION

English, Accounts, Statistics Chartered Secretaries London, I. C. M. A. London, Advance Level. Ramasivam, Inter Chartered Secretaries London, B. Com., ''Sivan maligai'' Mariamman Lane, Thirunelvely South, Jaffna. (43882)

### விற்பனைக்கு

**BIRLA YAMAHA**
**BY 850 K**
**(யமாகா ஜெனரேட்டர்)**
**650-W**

விற்பனைக்கு உண்டு.

**'நியூ விமாகி'**

27/3, மின்சாரநிலையவீதி,
யாழ்ப்பாணம்.

(43878)

---

## யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம். (வ-து)

# பண்டிகை மலிவு விற்பனை

மேற்படி சமாசத்தில் பின்வரும் துணிவகைகள் மலிவு விலையில் விற்பனைக்குண்டு.

**வியாபாரிகளும், ரெடிமேட் ஆடை தயாரிப்பவர்களும் தொடர்பு கொள்ளலாம்.**

| துணி வகை / மீற்றர் | | விலை |
|---|---|---|
| சலஞ்சர் | — | 64.00 |
| பட்டசில்க் பிளேன் | — | 101.00 |
| பப்ரா கொலக்சன் | — | 138.00 |
| கொட்சீற் | — | 56.00 |
| கலர் பப்பிளின் | — | 54.00 |
| பெனியன் (சிறுவர்களுக்கான) | — | 35.00 |
| செக் சேட்டிங் | — | 145.00 |
| ரொன்சன் சேட்டிங் | — | 98.00 |
| சிலிப்ரெக்ஸ் சேட்டிங் | — | 95.00 |
| கஸ்பர் சேட்டிங் | — | 138.00 |
| 65: 35 சேட்டிங் | — | 80.00 |
| எரபா சேட்டிங் | — | 140.00 |
| கெனபோ சேட்டிங் | — | 132.00 |
| ரடோ சேட்டிங் | — | 145.00 |

மற்றும் பிளாஸ்ரிக் வாளிகள் (மூடிகளின்றி) பல்வேறு அளவுகளில் ரூபா 68/- ல் இருந்து 155/- வரையிலும் சிக்னல் பற்பசை, பிறைபான் (FRIPAN) ஆகியன மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவு விலையிலும், தரமான பெற்சீற், ரெடிமேற் சேட்வகை நிதானமான விலையிலும் விற்பனைக்குள்ளன.

**— பொது முகாமையாளர்.**
யா. மா. வி. உ. ச. நு. கூ. சங். சமாசம்.

இல. 111, பிரதான வீதி,
(பிரதம தபாற் கந்தோர் அருகில்),
யாழ்ப்பாணம். (சி-3641)

---

# அறிவித்தல்

## நல்லூர் ப. நோ. கூ. சங்கம் (வ / து) கிளைக்குழுத் தேர்தல்

மேற்படி சங்கத்தின் கிளைக்குழுத் தெரிவுக்கான நியமிப்புப் பத்திரங்கள் 07-12-96, 08-12-96 திகதிகளில் காலை 9. 00 மணி தொடக்கம் 10. 00 மணி வரை ஏற்கப்பட உள்ளன.

**07 - 12 - 96** ல் 5, 7, 8, 9, 10, 11, 12, 13, 14 16, 19, 23, 24, 26 ஆம் இலக்கக்-கிளைகள்

**08 - 12 - 96** ல் 1, 2, 3, 4, 6, 15, 17, 18, 20, 21, 22, 25 ஆம் இலக்கக்கிளைகள்

இது சம்பந்தமான விவரங்களை இச் சங்கத்தின் தலைமை அலுவலகத்திலும் கிளைகளிலும் ஒட்டப்பட்ட சுவரொட்டிகள் மூலம் அறிந்து கொள்ளும்படி தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**சோ. குமாரவேலு**
தேர்தல் உத்தியோகத்தர்.

பிரதேச செயலகம்,
நல்லூர். ( சி-3644)

---

## யாழ். மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்க விசேட பொதுக்கூட்ட அறிவித்தல்

காலம்:- **09 - 12 - 96,** திங்கட்கிழமை.
நேரம்:- முற்பகல் **10 . 00** மணி.
இடம்:- (39, 3ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்)
தலைமைச் செயலகம்.
விடயம்:- தொழில்சார் கலந்துரையாடல்.

அங்கத்தவர் அனைவரையும் தவறாது சமுகமளிக்கும் படி கேட்டுக்கொள்கின்றேன்.

நன்றி

**தலைவர்/ செயலாளர்.**
யாழ். மா. வெ. உ. சங்கம்.

(சி/ 3639)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 19 — 04 — 1910
உதிர்வு: 02 — 11 — 1996

அமரர்
## சின்னத்தம்பி பொன்னுத்துரை

திதி: **02—12—1996**

எங்கள் குடும்ப தீபமே பொன்னே!
அன்பின் திருவுருவே பண்பின் உறைவிடமே!
இவ்வுலகைவிட்டு முப்பத்தொருநாள் அகன்றதே!
ஆனாலும் எம்துயர் ஆறவில்லை.
இன்மொழிபேசி, பண்பின் இலக்கணமாய்
நன்னெறி காட்டிய நற்சுடரே!
ஏகபுத்திரன் சென்றவிடம் தேடிச் சென்றனையோ!
பஞ்சமங்கையரையும், மனைவியையும் தனியேவிட்டு
பிரிந்து சென்றாயே!
கனடாவில் இருக்கும் உன்னருமை சகோதரியையும்,
கொழும்பில் இருக்கும் அன்புச் சகோதரனையும்,
கண்ணில் காணாது விட்டுப் பிரிந்தனையோ!

குறிப்பு:

எமது அன்புத்தந்தைநோய்வாய்ப்பட்ட போதும், இறுதிக்கிரியைகளின் போதும் சகல வழிகளிலும் உதவி புரிந்த பெரியோர்கள், நண்பர்கள், உறவினர்களுக்கும், இங்கு நேரிலும் தபால் மூலமும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் நன்றியை தெரிவிப்பதுடன் எமது தந்தையின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்தின்றோம்.

பிரிவால் துயருறும்;
**மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், மைத்துனர்கள், பேரமக்கள்.**

இல 22 (8) பலாலிவீதி,
யாழ்ப்பாணம். (43879)

---

# நீங்கா நினைவில் ஓராண்டு

## சுழியில் சிக்கிய செல்வங்கள்



## செல்வன் பத்மராசா பத்மபிரபா

(யா/ யூனியன் கல்லூரி 95 ஆம் ஆண்டு A/L வர்த்தக பிரிவு)

பிறப்பு: **1976-03-10** இறப்பு: **1995-12-02**

மற்றும்

## செல்வன் ஜெயகநாதன் ஜெகரூபன்

(யா/ செங்குந்த இந்துக்கல்லூரி 11 ஆம் ஆண்டு)

## செல்வன் முருகானந்தம் உதயணன்

(யா/ஹாட்லிக் கல்லூரி 10 ஆம் ஆண்டு)

வாழ்வினில் ஒன்றிய நாம்
உங்கள் அவலச் சாவில் பிரிந்து
அனலிடைப் புழுப்போல் துடிக்கிறோம்.

தங்கள் பிரிவால் துயருறும்:
**அப்பா, அம்மா, தம்பிமார், உற்றார், உறவினர், நண்பர்கள்.**

நிரந்தர முகவரி:
வீமன்காமம்,
தெல்லிப்பழை.
(9016)

தற்காகலி முகவரி:
35/9, விபுலானந்தர் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## சங்கட நிலைக்கு வித்திடும்!

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கு, எதிர்வரும் ஜனவரி பதினைந்தாம் திகதிக்கு முன்னர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி, தெற்கில் போராட்டம் நடத்த முடிவாகி உள்ளது.

பொதுசன ஐக்கிய முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியே இந்தப் போராட்டத்தை நடத்தப் போவதாக அறிவித்துள்ளது. அமைச்சர் ஸ்ரீமானி அத்துலத் முதலி இப்போராட்டத்துக்குத் தலைமை வகிப்பார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்கும் விவகாரத்தில் அரசாங்கம் பின்னடித்து வருவது குறித்து, அதற்கான அரசமைப்புத் திருத்தத்தைக் கொண்டு வருவதில் தாமதம் காட்டுவது குறித்து, ஸ்ரீமானியின் கட்சி ஆவேசமாக நிற்பது சம்பந்தமாக ஏற்கனவே இப்பத்தியில் எழுதப்பட்டுள்ளது.

அரசாங்கத்துக்குள்ளே கட்சி மட்டத்தில் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டிய இவ்விவகாரத்தை, ஆகக் குறைந்தது நாடாளுமன்றத்திலே பேசிச் சமரசம் காண வேண்டிய இவ்விடயத்தை, வெளியே கொண்டு செல்ல ஜ. ஐ. தே. முன்னணி முடிவு செய்திருப்பது அரசியலில் நிச்சயமாகத் தாக்கங்களைக் கொண்டு வரவே செய்யும்.

இனப்பிரச்சினைக்குத் தாம் முன்வைத்துள்ள அதிகாரப் பரவல் தீர்வை நிறைவேற்றும் வரைக்கும், நிறைவேற்று ஜனாதிபதிமுறையை ஒழிப்பது உசிதமல்ல என்று சந்திரிகா எண்ணுகிறார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்பது இப்போதைக்கு நடக்கக்கூடிய காரியமல்ல. அதிகாரப் பரவல் திட்டத்தை நிறைவேற்றுவது என்ற சாட்டில் நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிப்பை காலங்கடத்துவதற்கு வாய்ப்புண்டு என்று ஸ்ரீமானி சந்தேகிக்கிறார்.

அதிகாரப் பரவல் திட்டத்தை நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையுடன் நிறைவேற்றுவதற்கேனும், ஸ்ரீமானியின் கட்சியின் ஆதரவு தேவை. எனவே அந்தத் துரும்புச் சீட்டை வைத்துக் கொண்டு ஸ்ரீமானி வெளியில் களத்தில் இறங்க முடிவு செய்திருக்க வேண்டும்.

எப்படியோ, உத்தேச போராட்டம் ஆரம்பிக்கப்பட்டால், அது அரசின் ஸ்திரத்தன்மையை மேலும் கேள்விக் குறியாக்கும்; சங்கடமான ஒரு நிலைக்குள் தள்ளும்; பெரும் அரசியல் நெருக்கடியைக் கூடத் தோற்றுவிக்கலாம்.

ஜனாதிபதி சந்திரிகா ஏற்கனவே எச்சரித்திருப்பதால் நாடாளுமன்றம் கலைக்கப்படும் அபாயமும் உண்டு. அத்தகைய ஒரு நிலை தோற்றுமானால் ஏற்கனவே போரினால் பாதிப்புற்றிருக்கும் நாடு சகல வகைகளிலும் மேலும் கீழ் நிலைக்குச் செல்லும்.

அரசியலில் எந்த நேரம் என்ன நடக்கும்; யார் எவ்வழி செல்வார்; என்று கூறுவது கடினம். இரு பெண்களின் அரசியல் கருத்து முரண்பாடு எங்கே இட்டுச் செல்லும் என்பதனைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்!

# காணிப் பகிர்வு அதிகாரத்தை பிராந்திய சபைக்கு வழங்கலாமா?

## தெரிவுக்குழுவில்சர்ச்சை

கொழும்பு, டிச. 2

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அரசு முன்வைத்துள்ள யோசனைகள் குறித்து ஆராய்ந்து வரும் — அரசமைப்பு சீர்திருத்தம் தொடர்பான — நாடாளுமன்றத் தெரிவுக்குழ கடந்த வாரம் நான்கு நாளகள் கூடியபோது காணிப்பகிர்வு அதிகாரத்தைப் பிராந்திய சபைகளுக்கு வழங்குவதா? இல்லையா? — என்பது குறித்து காரசாரமான விவாதங்கள் இடம் பெற்றன.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (லலித் பிரிவு) எம். பியான ரவி கருணநாயக்க, காணிப்பகிர்வு எக்காரணம் கொண்டும் பிராந்திய சபைகளுக்கு கையளிக்கப்படக் கூடாது; மத்திய அரசின் கையிலேயே அது இருக்க வேண்டும் என்று வாதிட்டார்.

அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் பீரிஸ், அமைச்சர் தொண்டமான், தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி. நீலன்திருச்செல்வம் ஆகியோர் காணிப் பகிர்வு பிராந்திய சபைகளிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்; அதுவே அதிகாரப் பரவலாக்கல் என்பதற்கு பொருத்தமானது — என்று கூட்டாகத் தெரிவித்தனர்.

''பிராந்திய சபைகளிடம் காணிப்பகிர்வு அதிகாரத்தைக் கையளிப்பதன் மூலம் எமது நாட்டை வெளிநாடுகளுக்கு குத்தகைக்கு விடலாமா?'' — என்று ரவி கருணநாயக்க கேள்வி எழுப்பினார்

''பிராந்திய சபை விரும்பினால் வெளிநாட்டுக்கு காணியை விற்கலாம் அல்லது குத்தகைக்கு விடலாம்'' — என்று அமைச்சர் பீரிஸ் பதிலளித்தார்.

''ஹொங்கொங்கை சீனா பிரிட்டனுக்கு கொடுத்தது போன்றநிலை தோன்றாதா?'' —என்று கேட்டார் ரவி கருணநாயக்க.

(7 ஆம் பக்கம் பார்க்க)

## குற்றப் பத்திரம் இன்று கையளிப்பு

கைதடி மாணவியான கிருஷாந்தி மற்றும் அவரது தாயார், தம்பி, அயலவர் கொலைகள் குறித்த வழக்கு இன்று கொழும்பு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது.

இச்சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள 9 இராணுவத்தினருக்கும், 2 பொலீஸாருக்கும் இன்று குற்றப்பத்திரிகைகள் கையளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-3-150)

சர்ச்சைக்குரிய

## நீதியரசர் ஷிராணி நீதிமன்று வருகிறார்!

கொழும்பு, டிச. 2

புதிய நீதியரசராக நியமமனம் பெற்றுள்ள ஷிராணி பண்டாரநாயக்கா இவ்வாரம் தமது பணியை ஆரம்பிக்கவிருக்கின்ற அதே வேளை, அவரது நியமனத்தை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

அரசமைப்பின் கீழ் தமக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி இவரை நீதியரசராக ஜனாதிபதி நியமித்துள்ள போதிலும் அந்த நியமனத்தில் சில சட்ட ஓட்டைகள் உள்ளதாக சட்ட வல்லுநர்கள் குறிப்பிட்டு மேன் முறையீட்டு (அப்பீல்) நீதிமன்றத்தில் ரிட் மனுவையும், உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவையும் தாக்கல் செய்ய விருப்பதாகத் தெரிவித்தனர்.

முன்னாள் சட்டமா அதிபரின் ஆலோசனைப்படியே இந்த முயற்சி எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வழமையாக உயர் நீதிமன்றத்தில் நீதியரசர் பதவிக்கு ஒரு வெற்றிடம் ஏற்பட்டால் மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதியரசரே அப்பதவிக்கு நியமிக்கப்படுவது வழக்கம்.

ஆனால் தற்போது மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைமை நீதியரசராக இருப்பவர் இரண்டு மாகாண சபைகளை அரசு கலைத்தது தவறானது என்று தீர்ப்பு வழங்கியதால் அரச உயர் பீடத்தின் எரிச்சலுக்கு ஆளானவர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்தப் பின்னணியில் புதிய உயர் நீதிமன்ற நீதியரசர் பதவி வெற்றிடம் ஏற்பட்ட போது அவர் அப்பதவிக்கு நியமிக்கப் படாமல் —

நீதிமன்ற வழக்குகளில் அதிகம் ஆஜரானாத — 38வயதுடைய — சட்டகலாநிதி பட்டம் பெற்ற — ஷிராணி பண்டாரநாயக்கா அப்பதவிக்கு நியமிக்கப்பட்டிருப்பது பெரும் சர்ச்சையைக் கிளப்பியிருக்கிறது.

அவர் ஜனாதிபதி முன்னிலையில் புதிய நீதியரசராக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டுள்ள போதிலும் —

அவரை உயர் நீதிமன்றம் ஏனைய புதிய நீதியரசர்களை வரவேற்பது போல, வைபவ ரீதியாக வரவேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-3-150)

## ஜனாதிபதி பாரிஸுக்கு பயணமான விதம்!

கொழும்பு, டிச. 2

அண்மையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாரிஸ் விஜயம் செய்தபோது பாதுகாப்புக் காரண்ங்களுக்காக அவரின் பயண நடவடிக்கைகள் மிக இரகசியமாக வைக்கப்பட்டிருந்தன அல்லவா?

ஆனால் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை ஜனாதிபதியின் விஜயம் பற்றிய விவரத்தை நேற்று விலாவாரியாக வெளியிட்டது.

அன்றைய தினம் அலரி மாளிகையில் இருந்து ஹெலிக்கொப்டர் மூலம் இரத்மலானை விமான நிலையத்துக்கு சென்ற ஜனாதிபதி அங்கிருந்து ''அவ்ரோ'' விமானம் மூலம் மாலைதீவுக்குச் சென்றார்.

ஜனாதிபதியுடன் பாரிஸ் செல்லும் அதிகாரிகள் குழு ஏற்கனவே மாலைதீவுக்குச் சென்று, அங்கு காத்திருந்தது.

மாலைதீவு சென்றடைந்த ஜனாதிபதி உடனடியாகவே அங்கு தயாராக [illegible] 'எயர்பஸ்' மூலம் தமது குழுவுடன் நேரடியாக பாரிஸ் போய்ச் சேர்ந்தார்.

மாவீரர் வாரமான அந்த வாரத்தில் புலிகள் தாக்கலாம் என்ற காரணத்தாலேயே இவ்வாறு சந்திரிகா இரகசியப் பயணத்தை மேற்கொண்டார் என்று அப்பத்திரிகையில் பாதுகாப்புச் செய்தியாளர் இக்பால் அத்தாஸ் தெரிவித்துள்ளார்.

(உ-3-150)

### நாளை

**கார்த்திகை 18**
செவ்வாய்க்கிழமை
**திதி:** அட்டமி
முன்இரவு 9.59 வரை.
**நட்சத்திரம்:** பூரம்
முன் இரவு 3.38 வரை.
**ராகுகாலம் :** 3.15 - 4.45
**சுபநேரம்:** 10.45-12.15
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## தனித்துவத்தை இழக்கும் தனியார் மருந்தகங்கள்

மேலைத்தேய மருத்துவத்தில் பயன்படுத்தப்படும் ஆங்கில மருந்து வகைகள் விற்பனை செய்யும் தனியார் மருந்தகங்களுக்கு, ஏனைய தனியார் வர்த்தக நிலையங்களை விட, உயர்வானதும் தனித்துவமானதுமான மதிப்பை நீண்ட காலமாக எமது சமூகத்தினர் அளித்து வருகின்றனர்.

அத்துடன் தனியார் மருந்தகங்களில் பணிபுரிவோர், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் மருந்தாளர் (Pharmacist) பயிற்சி பெற்றவராக இருப்பதுடன் சிறந்த ஆங்கில அறிவுடையவராகவும் இருப்பது வழக்கம்.

### வாசகர் திருமுகம்

தற்போது நிலவும் மருந்துத் தட்டுப்பாடு காரணமாகவோ அல்லது வேறு காரணங்களிற்காகவோ என்னவோ யாழ்ப்பாண நகரப் பகுதியில் உள்ள இரண்டு தனியார் மருந்தகங்கங்கள் உட்பட குடாநாட்டின் வெவ்வேறு பகுதிகளில் உள்ள பெரும்பாலான மருந்தகங்கள் 'ரோச்லைற்', குத்துவிளக்கு போன்ற பொருளகளை விற்கும் பலசரக்குக் கடைகளாக மாறிக் கொண்டிருக்கின்றன.

இம் மாற்றம் காரணமாக பெரும்பாலான, ஆங்கில மருந்தகங்களில் மருந்துகள் பற்றிய அடிப்படை அறிவில்லாதவர்களே பணிபுரிவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

உண்மையில் 'ரோச்லைற்' விற்பதற்கு மருந்தாளர் பயிற்சி அவசியமில்லைத் தான். ஆனால் மருந்துகள் விற்பனை செய்யும் ஒருவர் மருந்தாளர் பயிற்சி பெற்றிருப்பது மிகமிக அவசியம் ஆகும்.

தனியே இலாபத்தை மட்டும் குறிக்கோளாகக் கருதி விலை மதிப்புள்ள மனித உயிர்களுடன் விளையாடக் கூடாது,

பொறுப்பானவர்களும் இதனைக் கவனியாது அலட்சியமாக இருந்தால், 'வயிற்றுளைவுக்கு மஞ்சள் நிறக் குளிகை, தொய்வு வருத்தத்திற்கு றோசாப் பூ நிறக் குளிகை' போன்ற வாய்ப்பாடுகளைப் பயன்படுத்தி, சிகிச்சை அளிக்கக் கூடிய ''மருத்துவர்கள்' தனியார் மருந்தகங்கள் சிலவற்றில் இருந்து தோன்றி விடக்கூடும்.

மருந்து விளையாட்டுப் பொருளல்ல; அது உயிர் காப்பது என்பதனைப் பொறுப்பானவர்கள் மற்றும் சம்பந்தப்பட்டவர்கள் உணர்வது எப்போது?

அ. கந்தமனோகரன்.

பண்டத்தரிப்பு.

## நெற்செய்கை விவசாயிகள் நட்டம் அடைய வேண்டுமா?

மழை எப்போது வரும்? வாடிய நெற்பயிர் எல்லாம் வளம் பெறுமா? உரம் இட்டு விளைச்சலைப் பெருக்கலாமா? என்று குடாநாட்டு விவசாயிகள் ஏங்கிய வண்ணம் இருந்தனர்.

அந்த ஏக்கத்தைப் போக்கும் விதத்தில் இயற்கை அன்னை மழையைக் கொடுத்தபோதும் யாழ். மாவட்டத்தில் குறிப்பாகத் தென்மராட்சியில் உர விநியோகம் சீராக இல்லை.

முதல் மழைக்கே நெல்லை விதைத்த விவசாயிகள் மழை உரிய காலத்திற் பெய்து உரமும் இடப்பட்டிருந்தால் இப்போது கதிர் வந்திருக்கும். பருவ மழை பிந்தியதால் அது சாத்தியப்படவில்லை. தற்போது மழை பெய்தும் உரிய முறையிற் பயிரைப் பேணி வளர்க்க உர விநியோகம் சீராக நடைபெறவில்லை.

முதலில் விதைத்த விவசாயிகள் உடனடியாக உரமிட வேண்டியவர்களாக உள்ளனர். ஆனால் உர விநியோகம் மந்தமாகவே உள்ளது. அது மட்டுமன்றி போதிய அளவிலும் விநியோகிக்கப்படவில்லை. இதனால் நெற் செய்கை பாதிப்படையும் நிலையுள்ளது. நான்கு ஏக்கர் விதைத்த விவசாயிகளுக்கும் ஒரு பை உரம், ஐந்து ஏக்கர் விதைத்த விவசாயிகளுக்கும் ஒரு பை உரம் என்ற ரீதியிலேயே உரம் விநியோகிக்கப்படுகிறது. பல ஏக்கர்களில் பயிரிட்ட விவசாயி ஒரு பை உரத்தைக் கொண்டு என்ன செய்ய முடியும்? உரம் போதிய அளவு கிடைக்குமென்ற நம்பிக்கையிலேயே விவசாயிகள் நெற் செய்கையில் ஈடுபட்டார்கள்.

தற்போதைய நடைமுறையில் ஐந்து கிலோ புழுதி மண் கொண்டு சென்று, பாதுகாப்பு அதிகாரிகளின் முன் கொட்டி ஒரு பை உரத்துடன் மண்ணைக் கலந்து கட்டியே உரத்தைக் கொண்டு செல்ல வேண்டும். ஒரு கமநலச் சேவை நிலையத்தில் 180 பேருக்குத்தான் இவ்வாறு உரத்தை விநியோகிக்கக் கூடியதாக இருக்கிறது. இந்த அடிப்படையில் உரத்தைப் பெற்று, உரிய காலத்தில் நெற்பயிருக்கு இட்டு விளைச்சலைப் பெருக்க முடியுமா?

அமோனியா உரம் இட்ட பின்னரே ரி. டி. எம். உரம் இடவேண்டும். ஆனால் ரி. டி. எம். உரம் இன்னும் வந்து சேர்ந்ததாக இல்லை. இந்த நிலையில் உரம் போதியளவு பெறமுடியும், விளைச்சலைப் பெருக்க முடியும் எனறு நம்பி விவசாயத்தில் ஈடுபட்ட விவசாயியின் கஷ்டத்தை யார் தீர்ப்பது? நஷ்டத்தை யார் நீக்குவது?

சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக உரிய நடவடிக்கைகளை எடுத்து விவசாயிகள் கை நட்டம் அடையாது காப்பாற்றுவார்களா?

ப. சேகரன்.

சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரப் பகிர்வு குறித்து ஐ.தே.க. முடிவு ஜனவரியில்!

## ரணில் அறிவிப்பு

கொழும்பு, டிச. 2

அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக தேசிய நலனைப் பாதுகாக்கும் வகையில் செயல்பூர்வமாக — ஆக்க பூர்வமாக — பங்கு பணியாற்றும் வகையிலான நடைமுறையை பின்பற்றுவது என ஐ.தே.க. முடிவு செய்துள்ளது.

இந்த விடயத்தில் ஐ. தே. கவின் நிலைப்பாடு ஜனவரியில் வெளியிடப்படும்.

மேற்கண்ட தகவலை ஐ.தே.க. தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.சி.எஸ் ஹமீத் ஐ.தே.க. தலைமைப் பீடத்துக்கு விடுத்த வேண்டுகோளில், அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக ஐ. தே. கவின் நிலைப்பாட்டை வெளியிடும் நேரம் வந்து விட்டது என்று தெரிவித்திருந்தார்.

இதையடுத்து ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க கடந்த 27 ஆம் திகதி விசேட கூட்டம் ஒன்றைக் கூட்டினார்.

இக் கூட்டத்தில் ஐ. தே. கவின் உயர்மட்டத் தலைவர்கள் விஜயபால மெண்டிஸ், டிரோன் பெர்னாண்டோ, கே.என். சொக்ஸி, றொனி டி மெல் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இக் கூட்டத்தையடுத்தே ஐ. தே. கவின் நிலைப்பாட்டை ரணில் வெளியிட்டார்.

சிறுபான்மையினரின் குறைகளை தீர்ப்பது குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்படும் என்றும் —

அதேவேளை பெரும்பான்மையினரின் நலன்களை உதாசீனம் செய்யாத வகையில் செயல்பட வேண்டும் என்றும் —

ரணில் மேலும் தெரிவித்துள்ளார். (உ-3-150)

### ஆயுதங்கள் மீட்பாம்!

கொழும்பு, டிச. 2

சண்டிலிப்பாய் பகுதியில் நேற்று முன்தினம் சுற்றிவளைப்புத் தேடுதலில் ஈடுபட்ட படையினர் அங்கு ஒரு தொகுதி ஆயுதங்கள் மற்றும் வெடிப்பொருள்களை மீட்டதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

### அரசுக்குள்ளும்...

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேவ நாணயக்காரா உள்ளூராட்சித் தேர்தல் அறிவிப்புக் குறித்து வியப்புத் தெரிவித்தார்.

''சண்டை நடக்கும் வடக்கில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவது எப்படி? இத்தகைய அறிவிப்பை வெளியிட முன்னர் தமிழ்க் கட்சிகளுடன் இது குறித்து அரசு பேச்சு நடத்தியிருக்க வேண்டுமல்லவா?'' — என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

அரசின் தேர்தல் அறிவிப்புக் குறித்து ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (லலித் பிரிவு) தலைவரும் அமைச்சருமான ஸ்ரீமானி அத்துலத் முதலியும் வியப்புத் தெரிவித்துள்ளார்.

தேர்தல் அறிவிப்பைத் தொடர்ந்து —

இம் மாதம் 11 ஆம் திகதிக்கும் 18 ஆம் திகதிக்கும் இடையில் எவரும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களில் போட்டியிட நியமனப் பத்திரம் தாக்கல் செய்யாது விட்டால், தேர்தல் திணைக்களம் ஒரு வார காலத்தில் அவற்றைத் தாக்கல் செய்ய இன்னொரு திகதியை அறிவிக்கும்.

அக்காலத்திலும் எவரும் நியமனப் பத்திரம் தாக்கல் செய்யாது விட்டால், தேர்தல் திணைக்களம் இவ்விடயத்தை உள்ளூராட்சி அமைச்சருக்கு அறிவிக்கும்.

பின்னர் அவர் இது பற்றி முடிவு செய்வார். (உ-3-150)

### காணிப் பகிர்வு...

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

''அது சாத்தியம்தான்'' — என்று கூறினார் அமைச்சர் பீரிஸ்.

''பிராந்திய சபையிடம் காணிப் பகிர்வு அதிகாரத்தைக் கையளித்து நாட்டை வெளிநாட்டுக்கு விற்கப் போகிறீர்கள்'' — என்று ரவி கருணநாயக்கா குற்றம் சுமத்தினார்.

''மத்திய அரசே காணிகளை வெளிநாடுகளுக்கு விற்கும் போது பிராந்திய சபை விற்பதில் என்ன பிழை?'' — என்று கேட்டார் அமைச்சர் தொண்டமான்.

இந்தக் கருத்தை ஸ்ரீலங்கா மக்கள் கட்சி பிரதிநிதி வை. பி. சில்வா ஆதரித்துப் பேசினார்.

காணிப் பகிர்வு, பொலிஸ் நிர்வாக முறை ஆகியன அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தின்படி பிராந்திய சபைகளுக்கு கையளிக்கலாம் என்று ஐ. தே. க. உறுப்பினர் ஹமீத் சுட்டிக் காட்டினார். (உ-3-150)

### வடக்குத் தேர்தல்களை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

18 க்கும் இடையில் தாக்கல் செய்யுமாறு கோரியுள்ளது.

ரெலோ, ஈ. பி. டி. பி., ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஈரோஸ், புளொட் ஆகிய ஐந்து கட்சிகள் இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான ஆணையை வன்மையாகக் கண்டிக்கின்றன.

கடந்த இரண்டு வருடங்களாக இலங்கையின் தென் பகுதியில் நடைபெற வேண்டிய உள்ளூராட்சித் தேர்தல்கள் பாதுகாப்பைக் காரணம் காட்டியும், தேர்தல் வைக்கக் கூடிய சூழ்நிலை இல்லை என்பதைக் காரணம் காட்டியும் இரண்டு தடவை பின் தள்ளி வைக்கப்பட்டன. ஆனால் வடக்கு மாகாணத்தில் இன்னமும் யுத்தம்நடந்து கொண்டிருக்கும் சூழ்நிலையில் அங்கு தேர்தலை நடத்த அரசு முனைந்துள்ளதானது எமக்கு வியப்பளிக்கின்றது.

முல்லைத்தீவு, வவுனியா நகரசபை தவிர்ந்த ஏனைய இடங்களுக்கு உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் நடக்கும் என்பதும் அவற்றுக்கான நியமனப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன என்பதும் இன்னும் வேடிக்கையாகவுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் மன்னார் தவிர்ந்த ஏனைய முழுப் பிரதேசமும் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. வவுனியாவிலும் ஒரு பகுதி புலிகளின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே உள்ளது. கிளிநொச்சியில் இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் உள்ள பிரதேசத்திற்குள் பொதுமக்கள் யாரும் இல்லை. மிகுதி நிலப்பரப்பு புலிகளின் கட்டுப்பாட்டிற்குள்ளேயே உள்ளது. இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் யாழ். குடாநாட்டிலும் நாளாந்தம் இராணுவத்திற்கும் புலிகளுக்கும் இடையில் மோதல் நடந்த வண்ணமே உள்ளது. இந்நிலையில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் எல்லாம் தேர்தலுக்கான நியமனங்களைக் கோரியிருப்பது எமக்கு வியப்பளிக்கிறது.

இது தவிர யாழ்ப்பாணத்தில் இருந்து அகதிகளாகிய மக்கள் இன்னமும் தமது இருப்பிடங்களுக்கு முழுமையாகத் திரும்பவில்லை. அங்கு அமைதியான சூழல் இல்லாததாலேயே பலர் அங்கு போகத் தயங்குகிறார்கள். மேலும், முப்பதினாயிரத்திற்கும் அதிகமான மக்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேறி வேறு இடங்களில் வசிக்க விரும்புகிறார்கள். அங்கிருக்கக் கூடிய பாதுகாப்பற்ற சூழ்நிலையாலேயே மக்கள் இந்நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். யாழ் குடாநாட்டைப் பொறுத்தவரை எந்த அரசியல் கட்சிகளும் அங்கு வேலை செய்ய முடியாத நிலையேயுள்ளது. அரசியல் வேலைகளில் ஈடுபட விரும்பும் எந்தவொரு அரசியல் கட்சிக்கும் அங்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை. இந்நிலையில் யாழ்ப்பாணம் உட்பட வடமாகாணத்தில் எவ்வாறு தேர்தலை நடாத்த முடியும்?

அரசின் முடிவு வடமாகாணத்தில் ஜனநாயகம், அமைதி, சிவில் நிர்வாகம் ஏற்பட்டு விட்டதென்ற மாயையான தோற்றத்தை சர்வதேச சமூகத்திற்கு காட்டுவதற்கான முயற்சியாகவே தோன்றுகிறது.

வடக்கு-கிழக்கில் அமைதி, ஜனநாயகம் உருவாக வேண்டுமென்பதில் நாம் ஆர்வமாகவும், உறுதியாகவும் உள்ள அதே சமயம் குறுகிய அரசியல் இலாபங்களை அடிப்படையாகக் கொண்ட — காலத்திற்கொவ்வாத — அரசின் நடவடிக்கைகளை நாம் கண்டிக்கிறோம்.

எனவே மக்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படாமல், அவர்கள் யாருக்கும் அஞ்சாமல் தேர்தல்களில் கலந்து கொள்ளும் சூழ்நிலை ஏற்படும் வரை இந்த உள்ளூராட்சித் தேர்தலை பின் போடுமாறு அரசைக் கேட்டுக்கொள்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

### அதிகாரப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

துள்ள நிலையில் —

அரசின் இந்த அறிவிப்பு வெளியாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஜனவரி மாத நடுப்பகுதியில் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று இது குறித்து ஆராயும் நாடாளுமன்ற தெரிவுக் குழுவை அரசு கேட்டுள்ளது.

அதே வேளை —

அரசமைப்பு யோசனைகள் குறித்த நகல் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க முன்னர் எக்காரணம் கொண்டும் சர்வ ஜன வாக்கெடுப்பு நடத்தப் படமாட்டாது என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது. (உ-3-150)

## தென்னாபிரிக்காவிடம் துவண்டது இந்தியா!

கல்கத்தாவில் நடைபெற்ற இந்திய — தென் ஆபிரிக்க அணிகளுக்கிடையேயான இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் தென் ஆபிரிக்கா 329 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

நேற்றுக்காலை இரண்டாவது இன்னிங்ஸ் துடுப்பாட்டத்தை ஆரம்பித்த இந்திய அணி 137 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. அசாருதீன் 52 ஓட்டங்களைப் பெற்றார்.

தென் ஆபிரிக்க அணியின் வேகப்பந்து வீச்சாளர் குறுஷினர் 64 ஓட்டங்களைக் கொடுத்து 8 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். இதுவே அவர் விளையாடிய முதலாவது டெஸ்ட் போட்டி என்பது குறிப்பிடத்தக்கது.

மூன்று டெஸ்டுகளைக் கொண்ட இந்தப் போட்டித் தொடரில் தற்போது 1 — 1 என்ற விதத்தில் இருநாடுகளும் சமநிலையில் உள்ளன. (உ-10)

### தப்பியோடிய படையினரை

## தேடிப் பிடிக்கும் முயற்சி ஆரம்பம்

கொழும்பு, டிச. 2

இராணுவத்தில் இருந்து தப்பி ஓடியவர்களைத் தேடிக் கண்டு பிடிக்கும் இராணுவ நடவடிக்கை நேற்றுத் தென்னிலங்கையில் முழு அளவில் ஆரம்பமானது.

தப்பியோடிய இராணுவத்தினர் மீண்டும் படையில் இணைவதற்கு வழங்கப்பட்ட காலக்கெடு கடந்த சனிக்கிழமை முடிவடைந்ததைத் தொடர்ந்து —

''தப்பியோடிய எலிகளை (Desert Rats) தேடிக்கண்டு பிடிக்கும் படை நடவடிக்கையை'' மேற்கொள்ளுமாறு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் உத்தரவிட்டிருந்தது தெரிந்ததே.

(நேற்றைய உதயனில் இது குறித்து வெளியான முதற் பக்கத் தலைப்புச் செய்தியில் இப்படை நடவடிக்கையின் ஆங்கில வாசகம் ''Desert Rates'' என்று தவறாக அச்சாகியதற்கு வருந்துகிறோம்.)

தப்பி ஓடிய இராணுவத்தினர் ஒளித்திருக்கலாம் எனக் கருதப்படும் தென்பகுதிப் பிரதேசங்களில் படையினர் வீதித்தடைகளைப் போட்டு தேடுதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

தப்பி ஓடிய படையினர் தொடர்பான விவரங்களைத் தருமாறு பொது மக்களைக் கோரும் சுவரொட்டிகளைப் படையினர் அப்பகுதிகளில் ஒட்டியுள்ளனர். (அ-3-150)

### 10 ஆம் திகதி மனித உரிமைகள் தினம்

## கடைகளைப் பூட்டி பிரார்த்தனை செய்க!

### கொழும்புத் தமிழரிடம் கோரிக்கை

மனித உரிமை தினமான எதிர்வரும் 10 ஆம் திகதி தமிழ்மக்கள் தமது உள்ளக் குமுறலை — உணர்வுகளை — சர்வதேச சமூகத்துக்கு தெரிவிக்கும் வகையில் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும் என்று அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வடக்கு — கிழக்கு பகுதியில் உள்ள மக்கள் இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால், இன்னல்படும் அம்மக்களுக்காக கொழும்பில் உள்ள தமிழர்கள் அன்று தமது கடைகளைப் பூட்டியும், அரச ஊழியர்கள் வேலைக்கு சமுகமளிக்காமலும் வீடுகளில், பொது இடங்களில் ஒன்று கூடி பிரார்த்தனைகளில் ஈடுபடவேண்டும்.

மனித உரிமை மீறல்களால் துன்பப்படும் மக்களின் உள்ளக் குமுறலை சர்வதேச சமூகத்துக்கு தெரியப்படுத்த முன்வர வேண்டும். — இவ்வாறு அவர் மேலும் கேட்டுக் கொண்டார். (உ-3-150)

## படையினருக்கு இரத்தம் தமிழ் எம். பிமார் தருவர்

வடக்கு — கிழக்கு யுத்தத்தில் காயமடையும் படையினருக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரத்த தானம் வழங்கும் திட்டத்தின் கீழ் இரத்தம் வழங்குவதற்கு ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தவிர்ந்த ஏனைய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

காயமடையும் படையினருக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரத்த தானம் செய்யும் திட்டம் ஒன்றை முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் அஸித பெரேரா முன் மொழிந்து, நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கையொப்பம் பெற்று வருகிறார்.

இது வரை 130 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர் என்று அவர் தெரிவித்துள்ளார்.

டக்ளஸ் தேவானந்தா தற்சமயம் வெளிநாட்டில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-3-150)

### கவலைக்கிடமான நிலையில்

அன்னை திரேஸாவுக்கு சிகிச்சை அளித்து வரும் மருத்துவர்கள் அவரது நிலை குறித்து கவலை தெரிவித்துள்ளனர்.

அவரது இருதயத் துடிப்பு சீரற்று உள்ளது. அவருக்கு நீண்ட காலமாக இருந்து வந்த நுரையீரல் மற்றும் சிறுநீரகம் சம்பந்தமான பிரச்சினைகள் மீண்டும் தலைதூக்கி உள்ளன. அவரது பல உறுப்புகள் இயங்காமல் போய்விடும் அச்ச நிலையும் உள்ளது.

— இவ்வாறு அவருக்கு சிகிச்சை அளித்து வரும் கல்கத்தாவில் உள்ள — டி. எம். பிர்லா இருதய ஆய்வு மையம் நேற்று வெளியிட்ட அறிக்கை தெரிவித்தது.

### ஆர்ப்பாட்டம்

மடு அகதி முகாமில் உள்ள ஆயிரக்கணக்கான மக்கள் தமக்கு அடிப்படைத் தேவைகளை வழங்கக்கோரி கடந்த வெள்ளியன்று ஆர்ப்பாட்டப் போராட்டம் ஒன்றை நடத்தியதாக அறியவந்தது.

மரண அறிவித்தல் 2 ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால்யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02 - 12 - 1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org